REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 செப்டெம்பர் 8 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 212 | Thursday 08, September, 2022 | 12பக்கங்கள் | 40/-




ஊட்டச்சத்து குறைபாடுள்ள சிறுவர்கள் தொடர்பில்

## யுனிசெப் தயாரித்த அறிக்கையை சுகாதார அமைச்சு நிராகரிப்பு



ஐந்து வயதுக்குட்பட்ட எடை குறைந்த சிறுவர்கள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர் கொள்ளும் நாடுகளில் இலங்கை 6 ஆவது இடத்திலும், தெற்காசியாவில் 2 ஆவது இடத்திலும் உள்ளதாக குறிப்பிடும் யுனிசெப்பின் (UNICEF) அண்மைய அறிக்கையை இலங்கையின் சுகாதார அமைச்சு நிராகரித்துள்ளது.

சுகாதார அமைச்சில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, இந்த அறிக்கையை தொகுக்க யுனிசெப் பயன்படுத்திய தரவுகள் திருப்திகரமாக

04

## அரச ஊழியர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவு நிலுவை ரூ.1550 கோடி

06 மாதங்களுக்குள் வழங்க அரசு திட்டம்






அரச ஊழியர்களுக்கு நிலுவையிலுள்ள 1,550 கோடி ரூபாய் ஓய்வூதிய கொடுப்பனவு பணிக்கொடைத் தொகையை 06 மாதங்களுக்குள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் 1,700 கோடி ரூபாவுக்கும் அதிகமான ஓய்வூதிய கொடுப்பனவு பணிக்கொடை நிலுவைத் தொகையாக வழங்கப்படவிருந்ததுடன், திறைசேரியினால் 1,500 மில்லியன் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. 2021ஆம் ஆண்டுக்குரிய மீதிப் பணத்தை ஓய்வூதியத் திணைக்களத்துக்கு இந்த

04

## பிரித்தானிய புதிய பிரதமர் ட்ரஸிற்கு ஜனாதிபதி வாழ்த்து

பிரிட்டனின் புதிய பிரதமராகவும், கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ள எலிசபெத் ட்ரஸ் (Elizabeth Truss) க்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கையும் ஐக்கிய இராச்சியமும் வரலாற்றினால் பிணைக்கப்பட்டிருப்பதுடன் நீண்டகால நட்புறவைக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். பல அமைச்சுப்

04

உலக உணவுத் திட்டத்தின் கீழ் எதிர்வரும் அக்டோபர் முதல்

# தோட்ட தொழிலாளர்களுக்கு விசேட கொடுப்பனவுத் திட்டம்

அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று அறிவிப்பு



சகல பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும், நகரங்களிலுள்ள தோட்ட சமூகத்தினருக்கும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் உலக உணவுத் திட்டத்தின் கீழ் விசேட கொடுப்பனவு வழங்கப்படவிருப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று (07) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதிய கூட்டத் தொடரின் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை


04

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் சகல தோட்ட சமூகத்தினருக்கும் விசேட கொடுப்பனவு திட்டம்**

பொருளாதார, சமூக நெருக்கடிக்கு தீர்வு காண

## தேசிய சபையை உருவாக்க கட்சித் தலைவர்கள் இணக்கம்

பிரதமர் தலைமையில் கூடியபோது தீர்மானம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் வகையில் தேசிய சபையொன்றை அமைப்பதற்கு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று பாராளுமன்ற கட்டடத்தில் கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய சபையை அமைப்பதற்கான யோசனைகளை

04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில்

## புதிய இராஜாங்க அமைச்சர்கள் இன்று சத்தியப்பிரமாணம்

**40 எம்.பிக்கள் இன்று பதவியேற்பர்**

புதிய இராஜாங்க அமைச்சர்கள் இன்று (08) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

சுமார் 40 இராஜாங்க அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி செயலக

04

## 300 எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூடுவதான செய்தி பொய்யானது

உண்மைக்கு புறம்பானது என CPC மறுத்து விளக்கம்

எரிபொருள் இன்மையால் நாளாந்தம் சுமார் 300 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எரிபொருள் இன்மையால் நாளாந்தம் சுமார்

04

நாட்டில் போதைப் பொருள் பாவனை அதிகரிப்பு:

## பாடசாலைகளில் மாணவர்களை பாதுகாக்க விசேட திட்டம் அமுல்

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் விளக்கம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

போதைப் பொருள் பாவனையிலிருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்கும் வகையில் அடுத்த மாதம் முதல் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதற்கான சுற்றறிக்கைகள் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அனுப்பப்படும் என்றும் அவர் சபையில்

04

பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள்:

## ஆறுமாத கால செல்லுபடியாகும் காலவரையறை எல்லை நீக்கம்

சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அரசு அறிவிப்பு



பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழுக்கான செல்லுபடியாகும் கால எல்லை இல்லையென இலங்கை பதிவாளர் நாயகம் திணைக்களம் அறிவித்துள்ளது.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் சான்றுறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள்

04

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு:

## ஆதரவு வழங்க அமெரிக்கா தயாரென அறிவித்தது



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கு தயார் என அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜனெட் யெலென் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா உதவும் பாரிஸ் கிளப் கொள்கைகளின் அடிப்படையில் நிதி உத்தரவாதங்களை வழங்கும் என தெரிவித்துள்ள அவர்,

04

## சீரற்ற காலநிலையால் 10 ஆயிரம் பேர் பாதிப்பு

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 09 மாவட்டங்களில் 2,729 குடும்பங்களைச் சேர்ந்த 10,885 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கேகாலை, இரத்தினபுரி, குருநாகல், புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச்

04

கொழும்பு மாவட்டத்தில் மட்டும்

## 50 ஆயிரத்துக்கும் அதிகமான போதைப்பொருள் பாவிப்போர்

புனர்வாழ்வளிக்க புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும்




**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 50,000 க்கும் மேற்பட்டவர்கள் மிக மோசமான போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாக அத்துரலிய

04

## நடைமுறைக்கு முரணாக செயற்பட்ட முகவர்கள்

300 பேரை இடைநிறுத்தியது லிற்றோ




சமையல் எரிவாயுவை மக்களுக்கு விநியோகிக்கும்போது நடைமுறைக்கு முரணாக செயற்பட்ட 300க்கும் மேற்பட்ட விற்பனை முகவர் நிலையங்களுக்கான எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை நிறுத்தியுள்ளதாக லிற்றோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். கடந்த

04

## ஓய்வுபெறும் வயது 60 ஆக குறைக்கும் சுற்றறிக்கை

அடுத்த இரு தினங்களில் அரசினால் வெளியிடப்படும்

ஓய்வுபெறும் வயதை 60 ஆக குறைப்பதற்கான சுற்றறிக்கை அடுத்த இரு தினங்களிலும், ஐந்து வருட விடுமுறைக்கான சுற்றறிக்கை அடுத்த வாரத்திலும் வெளியிடப்படுமென பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்ன தெரிவித்தார்.

ஆண்டுக்கு சுமார் 18,000 அரசு ஊழியர்கள் ஓய்வு பெறுவதாகவும், ஓய்வு பெறும் வயது 60 ஆக மாற்றப்பட்டுள்ளதால், ஜனவரி

04

## செம்மணி படுகொலையின் 26ம் ஆண்டு நினைவேந்தல்

நேற்று உணர்வுபூர்வமாக நடைபெற்றது




யாழ்.செம்மணி பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருசாந்தியின் 26ஆவது ஆண்டு நினைவேந்தல் செம்மணி பகுதியில் நேற்று(07)

04

## அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 12 பேர் கைது

**கடற்படையினரால் படகுகளும் கைப்பற்றல்**



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மற்றும் அலம்பில்

04

## நொச்சியாகமவில் சிறுத்தைப் புலி

வாராந்த சந்தைக்கு அருகில் கண்டுபிடிப்பு



நொச்சியாகம நகரிலுள்ள வாராந்த சந்தைக்கு அருகில் சிறுத்தைப் புலி ஒன்று வந்துள்ள சம்பவம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுத்தையைக் கண்ட மக்கள்

04

# அமைதியான போராட்டம் நடத்தியவர்களின் எதிர்பார்ப்புகளை நாம் நிறைவேற்ற வேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சியின் 76 ஆவது ஆண்டு விழாவில் கட்சித் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை

போராட்டம் முடிந்தாலும், போராட்டம் நடத்திய அந்த இளைஞர், யுவதிகளின் நம்பிக்கை வீண்போகவில்லை. அவர்களின் எதிர்பார்ப்புகளை நாம் நிறைவேற்ற வேண்டும்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 76 ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.





**நாம் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளராகவோ, மொட்டுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஈபிடிபி, ஐக்கிய தேசியக் கட்சி அல்லது சுயேச்சையாக இருந்தாலும் சரி, நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்பதை மறக்கக் கூடாது. நாம் ஒன்றிணைந்து இந்த நாட்டை முன்னேற்றுவோம்!**

ஜனாதிபதி தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கிய தலைவர்களை இன்று நினைவுகூருகிறோம். டி.எஸ். சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, சேர் ஜோன் கொத்தலாவல, ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச மற்றும் டி.பி. விஜேதுங்க ஆகியோர் இந்தக் கட்சியைக் கட்டியெழுப்பவும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பவும் பாடுபட்ட தலைவர்களாவர்.

அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டுதான் நான் இன்று இங்கு வந்துள்ளேன். இந்தக் கட்சியில் இருந்து உருவான நான்காவது ஜனாதிபதியாக நான் இன்று பேசுகிறேன். இன்று நாம் அனைவரும் இணைந்து இந்த அரசாங்கத்தை முன்னெடுத்து வருகிறோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உட்பட பல கட்சிகளின் ஆதரவுடன் இந்த அரசாங்கம் செயற்படுகிறது.

இன்று நாடு பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இந்த நாட்டின் வரலாற்றில் இதற்கு முன் இப்படி ஒரு நெருக்கடி இருக்கவில்லை. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதற்கு தீர்வு காண வேண்டியுள்ளது. இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில்தான் இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளேன்.

முன்பிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் மற்றும் ஜனாதிபதிகளைப் போன்று பதவிகளை வழங்குவதற்கு இன்று என்னால் முடியாது. மக்கள் இன்று அழுத்தத்தில் உள்ளனர். சிலரால் மூன்று வேளையும் சாப்பிட முடியாத நிலை உள்ளது. பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். நாம் அனைவரும் நமது உழைப்பால் நிச்சயமாக இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவோம்.

கடந்த வருட மாநாட்டை சூம் தொழில்நுட்பத்துடன் கொண்டாடினோம். இந்த நாட்டில் இன்றைய இளைஞர்கள் தற்போதைய அரசியலை வெறுக்கிறார்கள். எதிர்க் கட்சிகள் விமர்சனங்களை மட்டும் செய்கின்றன. கொள்கை அரசியலை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். நவீன அரசியலை மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் நாங்கள் யாரும் அதை பின்பற்றவில்லை. இறுதியாக அழுத்தம் அதிகரித்து இந்நாட்டு இளைஞர்கள் ஏப்ரல் மாதம் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அது ஒரு அமைதியான போராட்டம். அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். துப்பாக்கி ஏந்தாமல் நாட்டில் மாற்றம் தேவை என்று முதன்முறையாக இளைஞர்களும், யுவதிகளும் அறிவித்தனர்.ஆனால் அதற்குள் வன்முறை புகுந்தது.

ஜூலை 9 மற்றும் 13 ஆம் திகதிகளில் ஆட்சியை முடக்க முயன்றார்கள். பாராளுமன்றத்தைக் கைப்பற்ற முயற்சித்தார்கள். இது தோல்வியடைந்தவுடன், போராட்டமும் தோற்றது. சில தவறுகளால் அதன் நன்மையை இழக்க நேரிட்டுள்ளது. ஆனால் இங்கு போராட்டம் முடிந்தாலும் அந்த இளைஞர், யுவதிகளின் நம்பிக்கை வீண்போகவில்லை. அவர்களின் எதிர்பார்ப்புகளை நாம் நிறைவேற்ற வேண்டும்.

**புதிய பொருளாதாரத்தை உருவாக்குவோம். இதற்குத் தடை போட யாருக்கும் இடமளிக்க மாட்டோம். இப்பயணத்தை முன்னெடுப்போம். ஜப்பானால் முடியும் என்றால், கொரியாவினால் செய்ய முடியும் என்றால் ஏன் எம்மால் முடியாது? தண்ணீர் இல்லாத சிங்கப்பூரினால் செய்ய முடியும் என்றால், மணல் உள்ள துபாயால் செய்ய முடியும் என்றால், ஏன் இலங்கையால் முடியாது?**



இந்த காலப்பகுதியில் அரசாங்கம் என்ற வகையில் 22 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். அதை நிறைவேற்ற வேண்டும் அரசியலமைப்பு மேலும் திருத்தப்பட்டுள்ளது. விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நீக்கப்பட வேண்டும். அரசியலமைப்புக்கு முரணான சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரம் நீக்கப்பட வேண்டும்.

(04 ஆம் பார்க்க)




# ரம்புக்கனை துப்பாக்கி சூட்டுச் சம்பவம்; வழக்கு விசாரணைகள் ஒத்திவைப்பு

புலத்கொஹுப்பிட்டிய குறூப் நிருபர்

ரம்புக்கனை நகரில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் போது துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்பான வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று (7) கேகாலை நீதவான் நீதிமன்றில் நீதவான் வாசன நவரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவத்தில் சமிந்த லக்ஷன் என்ற இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இச்சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.கிர்திரத்னவின் கையடக்க தொலைபேசி பதிவுகள், ரம்புக்கனை எரிபொருள் நிரப்பு நிலையத்தின் சி.சி.டிவி காட்சிகள் தொடர்பில் அறிக்கை கிடைக்கப்பெறவில்லை என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சார்பில் ஆஜரான சுமித் மேலும் தெரிவிக்கையில், இச்சம்பவம் தொடர்பில் 250 சாட்சிகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், ஏப்ரல் 19ஆம் திகதி ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் பொதுமக்கள், பொலிஸ் அதிகாரிகள் என 20 பேர் வரை காயமடைந்ததாக தெரிவித்தார்.

இங்கு, பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி, பிரதான சந்தேகநபரான பொலிஸ் பரிசோதகரின் கையடக்க தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகளை தாமதப்படுத்தாது சமர்பிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து விசாரணைகளை துரிதப்படுத்துமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு நீதவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவத்தில் சந்தேகநபர்களான அப்போதைய கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.கிர்த்திரத்ன, ரம்புக்கனை எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பௌசருக்கு தீ வைத்த சந்தேகநபர் ஆகியோரும் ஆஜராகியிருந்தனர். இவ்வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஒக்டோபர் 26ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நீதவான் உத்தரவிட்டார்.

# மலையக மக்களுக்கு நிவாரணத்துடன் சத்துணவு திட்டங்கள் அவசியம்

## சபையில் வடிவேல் சுரேஷ் எம்.பி

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டின் ஏற்பட்டுள்ள போஷாக்கின்மை பிரச்சினையால் மலையக மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக வடிவேல் சுரேஷ் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறுவர் மற்றும் தாய்மாரின் போஷாக்கு தொடர்பில் யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பெருந்தோட்டக் கம்பனிகளின் அடாவடி நிர்வாக செயற்பாடுகளினால் மலையகத்தில் கர்ப்பிணிகள் பாதிக்கப்பட்டு அங்கவீனமான குழந்தைகள் பிறப்பதுடன், தாய் சேய் இறப்பு வீதமும் அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

உலகத்திலேயே போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை 06 ஆம் இடத்திலுள்ளது. அதேவேளை, இலங்கையில் மலையகம் முதலாம் இடத்தில் உள்ளது.

பெருந்தோட்டங்களில் தொழில் செய்பவர்களில் 80 வீதமானவர்கள் பெண்களாகும். அங்கு பல்வேறு சத்துணவுத் திட்டங்களை அறிமுகப்படுத்தினாலும் மிகவும் மந்தகதியிலேயே அவை செயற்படுத்தப்படுகின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பில் மூன்றுவேளை உணவைப் பெற்றுக்கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்கு மலையக மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மலையக பாடசாலைகளில் சத்துணவுத் திட்டமும் தற்போது கேள்விக்குறியாகியுள்ளது.

கோதுமை மாவின் விலை 440 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஆனால் தோட்டத் தொழிலாளியின் சம்பளம் ஆயிரம் ரூபாவாகவே உள்ளது. இதன் மூலம் 02 கிலோ மாவை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும். சாதாரண குடும்பத்தின் ஒருநாள் வாழ்க்கைச் செலவு 3,660 ரூபா என பேராதனை பல்கலைக்கழக ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் கோதுமை மாவின் விலை 440 ரூபா என்றால் மலையக மக்கள் எவ்வாறு வாழ்வது.

இந்த நிலையை கவனத்திற்கொண்டு உடனடியாக அரசாங்கம் தலையிட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு 3,650 ரூபா சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மலையகத்தில் நிவாரணத்துடன் சத்துணவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மண்சரிவு அனர்த்தம்



மாத்தளை சுழற்சி நிருபர்

சீரற்ற காலநிலை காரணமாக கலேவெல கல்வி வலயத்துக்குட்பட்ட அக்குரம்பொட வீரகெப்பட்டி தேசிய பாடசாலையின் மைதானப் பாதுகாப்பு மதில் சுவர் இடிந்து விழுந்துள்ளது. மதில் சுவர் மாத்தளை ஹீலிகந்த வீதியில் அமைந்துள்ளமையால், அவ்வீதியூடனான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. துப்புரவு செய்யும் பணியில் இராணுவத்தினர் தற்போது ஈடுபட்டுள்ளனர்.



நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் பாடசாலையில் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகள் மற்றும் ஆங்கில தினப்போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். பாரிஸ் தலைமையில் நேற்று (7) நடைப்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் எம். ஐ.எம். பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர். படங்கள் : தலாவக்கலை நிருபர்

# குளவி கொட்டியதால் தொழிலாளர்கள் பாதிப்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

நல்லதண்ணி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட லக்சபான தோட்ட எமில்டன் பிரிவில் தேயிலை கொழுந்து பறித்து கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது குளவிக் கொட்டியுள்ளது. குளவிக்கொட்டினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தோட்டவைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு,

மேலதிக சிகிச்சைக்காக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களில் 7 பெண்களும் 6 ஆண்களும் அடங்குவர்.

# ஸ்ரீ அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா

(பலாங்கொடைதினகரன் நிருபர்)

பலாங்கொடை நகரின் மத்தியில் அமைந்துள்ள ஸ்ரீ அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இம்மாதம் 9ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று ஸ்ரீ அருள்மிகு முத்துமாரியம்மன் தேரில் பலாங்கொடை நகரில் வலம் வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர் திருவிழாவின் போது பக்தர்கள் புடை சூழ கரகாட்டம், காவடி மற்றும் சிறுவர்களின் நடன நிகழ்ச்சிகள் உட்பட பல வைபவங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எட்டியாந்தோட்டை எக்கிளாஸ் மஹாசக்தி ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

எட்டியாந்தோட்டை, எக்கிளாஸ் கீழ்ப்பிரிவில் அமைந்துள்ள மஹாசக்தி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நேற்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் கர்மாரம்பம் கடந்த 05 ஆம் திகதி ஆரம்பமானதுடன், நேற்று புதன்கிழமை எண்ணெய்க்காப்பு நிகழ்வும் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தை 1957ஆம் ஆண்டு ஊர் மக்களால் ஒரு மடாலயமாக கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வழிபட்டு வந்தனர். இவ்வாலயத்தில் வெறும் பூசை வழிபாடுகள் மட்டுமில்லாமல் அறநெறி பாடசாலை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் என்பன இடம்பெற்றன.

2000ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆகம விதிக்கு முறையாக கடந்த 20 வருடங்களாக கட்டுமான வேலைகள் நடைபெற்று ஊர் மக்கள், இளைஞர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மிகவும் அழகுடன் காட்சியளிக்கின்றது.

இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் இன்றைய தினம் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.47
லுஹர் - 12.11
அஸர் - 03.13
மஃரிப் - 06.16
இஷா - 07.27

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் ஆவணி 23
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**
மேஷம் - செலவு
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# அளுத்கம நகரிலுள்ள காலணிகள் விற்பனை நிலையத்தில் கொள்ளை

*அளுத்கம துசித குமார டி சில்வா*

அளுத்கம நகரிலுள்ள காலணி விற்பனை நிலையமொன்றின் மேல்மாடி ஜன்னல் வழியாக நுழைந்து அதிக விலைக்கு விற்கப்படும் 20,000 ரூபாய் காலணி அடங்கிய இரண்டு பெரிய பைகளைத் திருடிச் சென்ற சந்தேக நபரை கைது செய்ய அளுத்கம பொலிஸார் விசாரணைகளை (6) ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தனர்.

விசாரணை நடத்திய பொலிஸார், கடையின் உரிமையாளர் கடையை திறக்க வந்த போது, மேல் மாடியிலுள்ள விளக்குகள் எரிந்துகொண்டு இருந்ததாக வு ம் அனைத்துவிட்டுச் சென்ற வி ளக்குகள் எவ்வாறு எரிகின்றன என்பதை ஆராய்ந்த போது, சந் தேக நபர் கடையின் மேல் தளத்திலுள்ள ஜன்னலை திறந்து இந்த திருட்டை மேற்கொண்டுள்ளதாகவும். கடைக்குள் நுழைந்த நபர் விலையுயர்ந்த காலணிகள் இருந்த 2 பைகளையும் பணத்தையும் திருடிச் சென்றமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக அளுத்கம பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் களுத்துறை குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் அளுத்கம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் இணைந்து சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# குறுகிய கால பயிர்ச் செய்கைக்கு ரயில்வே திணைக்கள காணிகள்

## அமைச்சர் பந்துல ஆலோசனை முன்வைப்பு



போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் ஆலோசனைக் கமைய பொலன்னறுவை மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடமாடும் சேவை அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நடைபெறவுள்ளது.

நாட்டிலேயே அதிகளவான காணிகளை வைத்திருக்கும் நிறுவனம் என்ற வகையில்,

04

# அரிசி இறக்குமதியை நிறுத்த எழுத்து மூலம் அறிவிப்பு

## இறக்குமதி வரிகளை விதிக்கவும் முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரிசி இறக்குமதியை நிறுத்துமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, இறக்குமதி தொடர்பில் சில வரிகளை விதிக்குமாறு அறிவித்துள்ளதாகவும் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நெல் கொள்வனவுக்காக இரு அரச வங்கிகளிடம் நிதி கேட்டுள்ள போதும் அதற்கான பணிகள் ஆமை வேகத்திலேயே இடம்பெறுவதாவும் கவலை தெரிவித்த அவர், நிதி கிடைத்ததும் நெல் கொள்வனவு முறையாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பா ரா ளு மன் ற த் தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ரோஹண பண்டார எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

உள்ளூர் விவசாயிகளிடம் கொள்வனவு செய்யும் நெல்லுக்கு பணம் வழங்க வேண்டிய பிரச்சினை, அதற்காக பணத்தை தேட வேண்டிய பிரச்சினையென இரு பிரச்சினைகள் எமக்குண்டு. இதனை தீர்ப்பதற்காக இரு அரச வங்கிகளிடம் நிதி கோரியுள்ளோம். உடனடியாக கிடைக்கவில்லை. அது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளருடனும் கலந்துரையாடினேன். ஆனால் நிதி வழங்குவதற்கான பணிகள் ஆமை வேகத்தில்தான் நடக்கின்றன. நெல் கொள்வனவுக்காக என்னால் தனிப்பட்ட ரீதியில் நிதி வழங்க முடியாது. அந்தளவுக்கு என்னிடம் பணமும் கிடையாது.

சோளப் பயிர்ச்செய்கையை மேலும் ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை

04

# சிறுவர், தாய்மார் தொடர்பான அரசின் திட்டங்களுக்கு பூரண ஒத்துழைப்பு

## சபையில் சஜித் பிரேமதாச

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டிய 57 இலட்சம் பேர் நாட்டில் உள்ளதாகவும் சிறுவர், கர்ப்பிணிகள்,பாலூட்டும் தாய்மார் மற்றும் பாடசாலை மாணவர்களை உள்ளடக்கியதாக ஒன்றிணைந்த வேலைத் திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தினால் அதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க தயாரெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சிறுவர் மற்றும் தாய்மாரின் போஷாக்கின்மை தொடர்பில் யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாடு தற்போது பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளது. யுனிசெப் அறிக்கைக்கமைய மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டிய 57 இலட்சம் பேர் நாட்டில் உள்ளனர்.

அவர்களில் 23 இலட்சம் சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.

நாட்டில் பயிர்ச்செய்கை 40 தொடக்கம் 50 வீதத்தால் குறைவடைந்துள்ளது. இந்த நேரத்தில் கட்சி பேதங்களின்றி நாம் செயல்பட வேண்டும். தாய், சேய் சுகாதாரம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பண வீக்கம் உயர்வடைந்துள்ளது. வாழ்வாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்கள் போஷாக்கான உணவுகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாரதூரமான போஷாக்கின்மை நிலைமையிலும்

04

### பாடசாலைகளில் மதிய உணவு

# ரூ.60 முதல் ரூ.150 வரை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம்

## சபையில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாடசாலை மாணவர்களுக்கு செலவிடப்படும் பகல் உணவுக்கான 60 ரூபாவை 150 ரூபா வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக சபை முதல்வர் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் அதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாக தெரிவித்த அமைச்சர், நேற்றைய தினமும் சீனா ஒரு தொகை அரிசியை அதற்காக வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை பாடசாலை மாணவர்களின் பகல் உணவுக்கு 150 ரூபாய் செலவிடுவதற்கு ஒத்துழைப்பு வழங்க லயன்ஸ் கிளப் முன் வந்துள்ளதாகவும்

04

### சீரற்ற கால நிலை தணிவு

# மீனவர்கள் கடலுக்கு இப்போது செல்லலாம்

## கடற்றொழில் திணைக்களம் அறிவிப்பு

புத்தளம் முதல் கொழும்பு, காலி ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்தை அண்டிய கடற் பகுதியில் நிலவும் சீரற்ற காலநிலை தணிந்து வருவதன் காரணமாக நேற்று 07ஆம் திகதி நண்பகல் 12.00 மணிமுதல் கடற்கரையை அண்மித்துள்ள கடற் பகுதியில் கடற்றொழிலாளர்கள் தொழிலுக்காக

04

# இந்திய உயர்ஸ்தானிகர் சபாநாயகருடன் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை (07) பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

இரு நாடுகளுக்கிடையேயான சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது மற்றும் உயர்கல்வி வாய்ப்புக்களை விஸ்தரிப்பது குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கு இந்திய அரசாங்கம் வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவுகளுக்கு சபாநாயகர் நன்றி தெரிவித்திருந்ததுடன், பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கு

# சஹ்ரானின் மனைவி உட்பட 06 பேர் 21 வரை விளக்கமறியல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த தற்கொலைக் குண்டுதாரி தேசிய தௌஹித் ஜமாத் தலைவர் பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா உள்ளிட்ட ஆறு பேரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார்.

சஹாரானின் மனைவி அப்துல் ஹமீத் பாத்திமா ஹாதியா, அசாருதீன் முகமது இல்மி, அப்துல் ஹமீத் முகமது ரிபாஸ், முகமது மஷ்னூக் முகமது ரிலா, முகமது அமீர் எம் அயதுல்லா, முகமது முபாரக் முகமது ரிபாயில் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

04


# இலங்கை திரிபோஷ லிமிடட்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை திரிபோஷ லிமிடட்டிற்கு 50 மெற்றித் தொன் முழுமையான ஆடை பால்மா/ முழுமையான பால்மாவை (Full Cream / Whole Milk Powder) வழங்குதல்**

**விலைமனு இல. SLTL/MKT/06/2022**

1. இலங்கை திரிபோஷ லிமிடட்டிற்கு 50 மெற்றிக் தொன் முழுமையான ஆடை பால்மா / முழுமையான பால்மாவை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை திரிபோஷ லிமிடெட்டின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (மேல்நிலை) அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.
3. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: +94-0112236588) மற்றும் பின்வரும் முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையே விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. இந்தப் பெறுகையில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ள இலங்கைச் சந்தைக்கு முழுமையான ஆடை பால்மா / முழுமையான பால்மாவை வழங்கும் உற்பத்தியாளர்கள் அல்லது ஏக நியமன முகவர்கள் / உற்பத்தியாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். வெளிநாட்டு முதன்மையாளர்களினால் நியமன முகவர்கள் / அங்கீகரிக்கப்பட்ட இலங்கை முகவர்களாக நியமிக்கப்படாதவர்களின் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 சகிதம் மீளளிக்கப்படாத கட்டணமாக 23,750.00 ரூபா ரொக்கப் பணத்தை ஜா-எல, கப்புவத்த, த.பெ. இல. 17, நீர்கொழும்பு வீதி, இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் செய்வதன் பேரில் 2022-09-21ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 2022-09-22ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2022-09-22ஆம் திகதி முதல் 2022-12-22ஆம் திகதி வரையான 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 1,875,000.00 ரூபா தொகைக்கான 2022-09-22ஆம் திகதி முதல் 2023-01-19ஆம் திகதி வரையான 119 நாட்கள் செல்லுபடியாகும் மத்திய வங்கியால் அனுமதிக்கப்படும் இலங்கையில் தொழிற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் (2022-09-22ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு) விலைமனுதாரர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:**

**தலைவர்,**
**மேல்நிலை பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிடட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**





## ரூ.60 முதல் ரூ.150 வரை... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் துஷார இந்துனில் அமரசேன எம்.பி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

கல்வி அமைச்சை நான் பொறுப்பேற்கும் போது பாடசாலை மாணவர் ஒருவருக்கான உணவுக்காக 30 ரூபாவே ஒதுக்கப்பட்டிருந்தது. நானே அதனை 60 ரூபாவாக அதிகரித்தேன். எவ்வாறெனினும் தற்போது முட்டையொன்று 60 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால் 60 ரூபா எந்த வகையிலும் போதாது. ஆகக் குறைந்தது 150 ரூபா அதற்காக செலவிடப்பட வேண்டும்.

உணவு தேவைப்படும் ஒரு மில்லியன் மாணவர்கள் உள்ளதால் அது இன்னும் ஒரு மாதத்தில் ஒன்றரை மில்லியனாக அதிகரிக்கலாம். எவ்வாறு எனினும் மாணவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத் திட்டம் தொடர்பில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தியுள்ளது.

சீன அரசாங்கம் எமக்கு பத்தாயிரம் தொன் அரிசியை வழங்கியுள்ளது. அதன் இரண்டாம் கட்ட அரிசி நேற்று எமக்கு கிடைத்துள்ளது. அத்துடன் அமெரிக்காவின் யூ எஸ் எய்ட் திட்டத்தின் மூலம் எமக்கு மஞ்சள் பருப்பு மற்றும் ரின் மீன் ஒரு தொகையும் கிடைத்துள்ளது. அத்துடன் ஒரு மாணவரின் உணவுக்காக 150 ரூபாய் வழங்குவதற்கு உதவுவதாக லயன்ஸ் கிளப் உறுதியளித்துள்ளது.

அந்த வகையில் இந்த திட்டத்தை படிப்படியாக முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சஹ்ரானின் மனைவி உட்பட... 03ஆம் பக்கத் தொடர்

சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாத நிலையில், சந்தேகநபர்களை ஸ்கைப் தொழில்நுட்பத்தினூடாக அவதானித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு அடுத்த சில தினங்களில் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

ஷங்ரில்லா ஹோட்டலில் குண்டுத் தாக்குதல் நடத்திய சந்தேகநபர் சஹ்ரானின் மனைவி அப்துல் ஹமீட் பாத்திமா ஹாடியா போகம்பரை சிறைச்சாலையிலும் ஏனைய சந்தேகநபர்கள் பூஸா ஆகிய இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## குறுகிய கால பயிர்ச்... 03ஆம் பக்கத் தொடர்

ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளிலிருந்து, ரயில்வே அபிவிருத்திக்கு தேவையான காணிகள் தவிர்ந்த ஏனைய காணிகள் குறுகிய கால அடிப்படையில் மக்களுக்கு வழங்கப்படுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

கால போக பயிர்ச் செய்கை மற்றும் வணிக ரீதியாக குத்தகை அடிப்படையில். தற்போது நிலவி வரும் உணவு நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில், ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட்டுள்ள உணவு பாதுகாப்பு குழுக்கள் மற்றும் விவசாய அமைப்புகள் மூலம் ஆண்டுக்கு பர்ச்சஸ் ஒன்று 100 ரூபாவுக்கு என்ற அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படுமென அமைச்சர் வலியுறுத்தினார்.

## அரிசி இறக்குமதியை... 03ஆம் பக்கத் தொடர்

எடுத்துள்ளோம். விதைச்சோளம் தட்டுப்பாடு நிலவுவதால் வெளிநாடுகளிலிருந்து அதனை இறக்குமதி செய்வதற்கு இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறுவர், தாய்மார்... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சரவை ஆவணங்களுக்கான போட்டிகள் நடக்கின்றன.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு எதிர்க்கட்சியில் இருந்து நூறு ஆதரவளிப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மீனவர்கள் கடலுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

செல்லலாம் என கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டைச் சுற்றியுள்ள கடற் பகுதியில் காணப்படும் சீரற்ற காலநிலை தணிந்து வருவதுடன் காலநிலை அறிவித்தல்கள் தொடர்பாக அவதானம் செலுத்தி கடற்றொழிலில் ஈடுபடுமாறு அனைத்து கடற்றொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா தெரிவித்துள்ளார்.

## ஆறுமாத கால செல்லுபடியாகும்...

வழங்கப்பட்ட தினத்திலிருந்து செல்லுபடியாகும் என்பதுடன் அதனை 06 மாதத்துக்குள் எடுக்கப்பட்ட சான்றிதல் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கேட்கப் படக் கூடாதென்று பதிவாளர் நாயகம் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ள பதிவாளர் நாயகம் திணைக்களம், 06 மாதங்களுக்கு முன்னர் செல்லுபடியாகும் எனச் சான்றளிக்கப்படுவதற்கான நகல் பிரதிகளுக்கான கோரிக்கைகளில் குறிப்பிட்டத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த ஆவணங்களுக்கு சரிபார்ப்பு காலம் இல்லையென தெரிவித்த பதிவாளர் நாயகம் திணைக்களம், கல்வி மற்றும் வெளிவிவகார அமைச்சுக்கள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்கள் பதிவு திணைக்களத்துக்கும் இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சான்றிதழ்களின் நகல்களின் திருத்தங்களைச் செய்ய மாத்திரமே கோரிக்கை விடுக்க முடியுமென்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஆதரவு வழங்க அமெரிக்கா...

இலங்கை தொடர்பில் உலகவங்கி உட்பட சர்வதேச நாணயநிதியம், சர்வதேச நிதியமைப்புகள் மற்றும் அமெரிக்க அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடிதமொன்றில் அவர் இதனை வெளிப்படுத்தியுள்ளதாக ரொய்டர் தெரிவித்துள்ளது. மிகமோசமான நிதிப்பேரழிவிலிருந்து விடுபடுவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை கடந்த மாதத்தின் இறுதிவாரம் 2.9 பில்லியன் டொலர் கடனுதவி தொடர்பாக சர்வதேச நாணயநிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டியிருந்தது.

கடன்வழங்கிய நாடு என்ற அடிப்படையில் அமெரிக்கா இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் பங்கேற்க முடியும் என செனட்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள யெலென், இலங்கைக்கு கடன் வழங்கிய அனைவரும் பேச்சுவார்த்தைகள் மற்றும் மறுசீரமைப்பில் முழுமையாக ஒத்துழைக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்துடன் இலங்கையின் பேச்சுவார்த்தைகளுக்கு உதவுவதற்காக அமெரிக்க திறைசேரி பல்வேறு அமெரிக்க நிறுவனங்கள், ஸ்தாபனங்கள், சர்வதேச நிதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் எனவும் அமெரிக்க திறைசேரியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## ஓய்வுபெறும் வயது 60 ஆக...

மாதத்திற்குள் 25,000 பேர் ஓய்வு பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார். ஆண்டுக்கு ஓய்வு பெறும் முப்படைகளின் எண்ணிக்கை எட்டாயிரம் முதல் ஆயிரம் வரை இருக்கும். இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் 4000 இராணுவ வீரர்கள் ஓய்வு பெற்றுள்ளனர். நாலாயிரத்திற்கும் மேற்பட்டோர் ஓய்வு பெற உள்ளனர்.

3,400 அரசு ஊழியர்கள் ஏற்கனவே ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். அரசு கொள்கைப்படி ஓய்வு பெறும் வயதை 65 ஆக நீடித்ததால், அரச ஊழியர்களின் ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பங்கள் குறைந்துள்ளன. ஆனால் தற்போது ஓய்வு பெறும் வயது 60 ஆக குறைக்கப்பட்டுள்ளதால் வரும் மாதங்களில் ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பங்கள் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டில் ஐந்தாண்டு விடுமுறை வழங்குவதற்கான சுற்றறிக்கை,

அரச ஊழியர்களுக்கு சுயதொழில் அல்லது தனியார் துறையில் பணிபுரிய ஐந்து ஆண்டுகள் உள்நாட்டில் விடுமுறை அளிக்கப்படுகிறது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கான ஆட்சேர்ப்பு அத்தியாவசிய விடயங்களுக்கு மட்டுமே நடைபெறும்.

எதிர்வரும் ஐந்து வருடங்களின் இறுதிக்குள் தற்போதைய பொருளாதார நிலை சாதகமான நிலையை எட்டுமென நம்புவதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

## செம்மணி படுகொலையின்...

அனுஸ்டிக்கப்பட்டது. இதன்போது செம்மணி பகுதியில் படுகொலை செய்யப்பட்ட ஏனையவர்களும் நினைவுகூரப்பட்டு அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்த் தேசிய கட்சியின் ஏற்பாட்டில் நேற்று காலை 10 மணியளவில் இடம்பெற்ற இவ் நினைவேந்தலில் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், தமிழ் தேசியக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

## 50 ஆயிரத்துக்கும் அதிகமான...

ரத்தன தேரர் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். போதைப் பொருள் பாவனையை தேசிய பிரச்சினையாக கவனத்தில் கொண்டு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார் கொழும்பு மாளிகாவத்தை,கொலன்னாவை மற்றும் வனாத்தமுல்ல பகுதிகளில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்க விசேட சட்டம் இயற்றப்பட வேண்டுமென்றும் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறங்களில் போதைப் பொருள் பாவனை பெருமளவில் அதிகரித்துள்ளன. விசேடமாக கொழும்பு மாவட்டத்தில் அது வெகுவாக அதிகரித்துள்ளது.ஹெரோயின் போதைப்பொருள் பாவனையை காட்டிலும் தற்போது ஐஸ் போதைப்பொருள் பாவனை சமூக மட்டத்தில் தீவிரமடைந்துள்ளது. பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஐஸ் போதைப் பொருள் பாவனை திடீரென அதிகரித்துள்ளமை பாரதூரமான நிலைமையாகும். ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் குறுகிய காலத்தில் சுகாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்படுவதுடன் சமூக பாதுகாப்புக்கும், சாதாரண மக்களின் அன்றாட வாழ்வில் அச்சமூட்டுவதாகவும் அவர்களின் செயற்பாடுகள் மாற்றமடைந்துள்ளன.

## அரச ஊழியர்களுக்கு ஓய்வூதிய...

ஒக்டோபர் மாத இறுதிக்குள் வழங்குவதற்குத் தேவையான 1550 கோடி ரூபாவை வழங்க திறைசேரி ஒப்புக் கொண்டுள்ளதாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் ஜகத் டயஸ் நேற்று (07) தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியப் பணிக்கொடையைச் செலுத்துவதற்குத் தேவையான நிதித் தொகையை 06 மாதங்களுக்குள் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு வழங்குவதற்கு திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது.

இதுவரை காலதாமதமாகி வந்த அரச ஊழியர்களின் ஓய்வூதிய கொடுப்பனவை வழங்குவதற்காக பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தன சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஆகஸ்ட் மாத தொடக்கத்தில், 1,700 கோடிக்கும் அதிகமான ஓய்வூதியப் பணிக்கொடை வழங்கப்பட வேண்டியிருந்தது, மேலும் பொது திறைசேரி பணிக்கொடைத் தொகையை வழங்குவதற்காக 1,500 மில்லியனை விடுவித்துள்ளதாக ஓய்வூதியச் சம்பளப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

## பிரித்தானிய புதிய பிரதமர்...

பொறுப்புக்களை வகித்துள்ள ட்ரஸ்ஸின் முதிர்ச்சியும் அனுபவமும், அவருக்கு வழங்கப்பட்டுள்ள மக்கள் ஆணையை நிறைவேற்றுவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். ஜனநாயக இலட்சியங்களால் வலுவூட்டப்பட்ட பலதரப்பு கூட்டாண்மை அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகள் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகள் பரந்தளவில் வியாபித்து காணப்படுகின்றன. பொதுநலவாய நாடுகளுடன் பிரிட்டன் ஆரம்பித்துள்ள புதிய பிளாட்டினம் கூட்டுத் திட்டத்தின் கீழ் ஐக்கிய இராச்சியத்துடனான உறவுகளை மேலும் வலுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 300 எரிபொருள் நிரப்பு நிலையங்களை...

300 எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவையாகும்.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக வழமையை விட அதிக பவுசர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தனியார் பவுசர் உரிமையாளர்கள் சங்கம் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் என்பன இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன. கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல முனையங்களும் , சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்தீகரிப்பு நிலையமும் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

சில ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளைப் போன்று எந்தவொரு எரிபொருள் நிரப்பும் நிலையத்தையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

முறையற்ற வகையில் எரிபொருள் விநியோகத்தை தவிர்ப்பதற்காகவே மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் ஆலோசனையுடன் மட்டுப்படுத்தப்பட்டளவில் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. தற்போது நாளாந்தம் இரு முனையங்களிலிருந்தும் சுமார் 4000 மெற்றிக் தொன் டீசலும் , 3000 மெட்ரிக் தொன் பெற்றோலும் விநியோகிக்கப்படுகிறது. இது எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்ட காலத்தில் விநியோகிக்கப்பட்டதை விட அதிகமாகும். எனவே எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படுவதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகளில் மாணவர்களை...

தெரிவித்தார். பாராளுமன்றில் நேற்று அத்துரலிய ரத்தன தேரர் எம்.பி முன்வைத்த கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதுரலிய ரத்தன தேரர் எம்.பி அது தொடர்பில் தெரிவிக்கையில்:

நாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதால் சுமார் ஒரு இலட்சம் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். ஹெரோயின் என்ற போதைப்பொருள் முதல் தற்போது ஐஸ் வகை போதைப் பொருட்களையும் மாணவர்கள் பயன்படுத்துவதாக அறியமுடிகிறது.இதனால் சுமார் 50 ஆயிரம் மாணவர்கள் வாழ்க்கையை இழந்துள்ளனர். அது தொடர்பில் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கு பதில் அளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, போதைப் பொருள் பாவனையிலிருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்கும் நடவடிக்கையாக அடுத்த மாதம் முதல் பாடசாலைகளில் சிறப்பு சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்கான சுற்றறிக்கைகள் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அனுப்பப்படும். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள மாணவர்கள் புனர்வாழ்வு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப் படவுள்ளனர். இந்த விஷேட சோதனை நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினரும் உள்வாங்கப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யுனிசெப் தயாரித்த அறிக்கையை...

இல்லை என தெரிவித்தார். 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் நடத்திய தேசிய அளவிலான கணக்கெடுப்பின்படி, இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் போசாக்கின்மை நிலை 13.2 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், யுனிசெப் அறிக்கை நீண்ட கால தரவுகளின் அடிப்படையில், சிறுவர்களின் ஊட்டச் சத்து குறைபாடுகள் மிகவும் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்துள்ளார். ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கணக்கிடுவதற்கு, வயதுக்கேற்ற உயரம், உயரத்துக்கான எடை மற்றும் வயதுக்கேற்ற நிறை ஆகிய மூன்று காரணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், ஆனால் யுனிசெப் தனியாக உயரத்துக்கேற்ற நிறையை மட்டும் பயன்படுத்துவதன் அடிப்படையில் தவறான அறிக்கையைத் தயாரித்துள்ளது என்றும் அவர் கூறினார். யுனிசெப் ஒவ்வொரு நாட்டிற்கும் வெவ்வேறு வருடங்களில் நடத்தப்பட்ட கணக்கெடுப்புகளின் தரவுகளை ஒப்பிட்டுப் பார்த்ததாகவும், இலங்கைக்கான 1995 முதல் 2019 வரையிலான நீண்ட கால ஆய்வுகளின் தரவுகள் ஒப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## சீரற்ற காலநிலையால்...

சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, நேற்று காலை 2 பேர் காயமடைந்துள்ளனர். 69 குடும்பங்களைச் சேர்ந்த 237 பேர் 09 தற்காலிக பாதுகாப்பு முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## நடைமுறைக்கு முரணாக...

காலங்களில் எரிவாயு விநியோகத்தில் எவ்வித முறைகேடுகளும் ஏற்படாத வகையில் புதிய முறைகளின் கீழ் நுகர்வோருக்கு எரிவாயு விற்பனை செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட...

கடற்கரையில் வைத்து இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

அவர்கள் வந்த படகில் இருந்த மீன்பிடி உபகரணங்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் திருகோணமலை கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக திருகோணமலை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## நொச்சியாகமவில் சிறுத்தைப் புலி...

உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலகம் மற்றும் வனஜீவராசிகள் அலுவலகத்துக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

பின்னர் வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் சிறுத்தையை வில்பத்து காப்புக் காட்டுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். சிறுத்தை சுகவீன முற்றுக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தோட்ட தொழிலாளர்களுக்கு...

வாய்ப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தில் கலந்துகொண்டே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் நகரப் புறங்களிலுள்ள தோட்ட சமூகத்தினருக்கு இதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்பொழுது காணப்படும் நெருக்கடிக்கு மத்தியில் ஜப்பான், கொரியா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு அதிக தொழிலாளர்களை அனுப்புவதை ஒழுங்குமுறைப்படுத்த தற்பொழுது நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அதேபோன்று ஜப்பான் போன்ற நாடுகளுக்குத் தொழிலாளர்களை அனுப்புவதாகத் தெரிவித்து வகுப்புகளை நடத்தும் மோசடிக்காரர்கள் இருப்பதால் பொதுமக்கள் சரியானதைத் தேடிப்பெற்றுக் கொண்டு செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இன்று (08) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ள கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டமூலம் இரண்டு மற்றும் வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்ட மூலம் என்பனவும் இங்கு கருத்தில் கொள்ளப்பட்டதுடன் அவற்றுக்கான அனுமதியும் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரட்ண, வடிவேல் சுரேஷ், டி.பிஹேரத், வேலுகுமார், அரவிந்த குமார் உள்ளிட்டவர்களும், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

## தேசிய சபையை உருவாக்க...

விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவும் இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தேசிய சபையின் தலைவராக செயல்படவுள்ளதுடன் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபை முதல்வர், மற்றும் ஆளும் கட்சியின் பிரதம கொரடா ஆகியோர் அதிகாரங்களை கொண்ட உறுப்பினர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

அவர்களுக்கு மேலதிகமாக பாராளுமன்றத்தில் அனைத்து கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி 37 பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த சபையில் உள்ளடங்கவுள்ளனர். நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் தேசிய சபையை அமைக்குமாறு சிவில் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தமையை கவனத்திற் கொண்டு இந்த தேசிய சபை அமைக்கப்படவுள்ளது.

## புதிய இராஜாங்க அமைச்சர்கள்...

வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜுலை 20ஆம் திகதி பதவியேற்றதன் பின்னர், அமைச்சரவை அமைச்சர்களாக பதவி வகித்த 18 பேரைக் கொண்ட புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டதுடன், இதுவரை இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படவில்லை.

அனைத்துக் கட்சி ஆட்சி தொடர்பான விவாதங்களுக்குப் பிறகு, அமைச்சரவையும் மாற்றியமைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அமைதியான போராட்டம்... (02 ஆம் பக்கம் தொடர்)

ஜனநாயகத்தை வலுப்படுத்துவற்கான மேலும் பல விடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கேற்ப நமது அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட வேண்டும். இவை அனைத்தையும் விட முக்கியமானது தேசிய சபை உருவாக்குவதாகும். தேசிய சபை தொடர்பில் இந்த வாரம் இறுதி முடிவு காண எதிர்பார்ப்பதாக பிரதமர் கூறியுள்ளார். அதனுடன் மேலும் புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட உள்ளன. பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டம் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம், உண்மையை கண்டறியும் ஆணைக்குழு தொடர்பான புதிய சட்டம் ஒன்றை முன்வைக்க இருக்கிறோம். இளைஞர் பாராளுமன்றம் சட்டப்பூர்வமாக்கப்படும். மக்கள் சபை அமைப்பது தொடர்பில் எமது முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய யோசனை ஒன்றை முன்மொழிந்துள்ளதுடன் அந்த பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசியல் தலையீடின்றி மக்கள் பணியாற்றும் வகையில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் மக்கள் சபைகள் உருவாக்கப்பட வேண்டும் அரசியலுக்கு அப்பாற்பட்டு நாட்டின் ஆட்சியில் பங்கேற்பதற்காக மக்கள் சபையொன்றை உருவாக்க வேண்டும் மேலும், 14,000 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்தும் யோசனைகளை பெற்று நாட்டை மேம்படுத்த முடியும். அரசியலமைப்பு, சட்டங்கள் பற்றிய கருத்துக்களை இங்கிருந்து பெறலாம். அரசியலை அரசியல்வாதிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தாதீர்கள். அரசியலின்றி மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் முக்கிய பணியை செய்யட்டும்.

IMFன் உதவியை பெற்றுள்ளோம். அதன் பிறகு, கடன் வழங்கும் நாடுகளிடம் இருந்து உதவிகளை பெற வேண்டும். புதிய பொருளாதாரத்தை உருவாக்குவோம். இதற்கு தடை போட யாருக்கும் இடமளிக்க மாட்டோம். இப்பயணத்தை முன்னெடுப்போம். ஜப்பானால் முடியும் என்றால், கொரியாவினால் செய்ய முடியும் என்றால் ஏன் எம்மால் முடியாது? தண்ணீர் இல்லாத சிங்கப்பூரினால் செய்ய முடியும் என்றால், மணல் உள்ள துபாயால் செய்ய முடியும் என்றால், ஏன் இலங்கையால் முடியாது?

2023 ஆம் ஆண்டில் இருந்து 2048 ஆம் ஆண்டு வரை 25 ஆண்டுகள் உள்ளன. இந்த காலப்பகுதிக்குள் சக்தி வாய்ந்த மற்றும் வளமான இலங்கையை உருவாக்குவோம். அடுத்த ஆண்டு முதல் அதை தொடங்குவோம். அதன் பலனை காண நான் இருக்க மாட்டேன். ஆனால் இங்குள்ள இளைஞர்கள் சிறப்பாக வாழக் கூடிய எதிர்காலத்தை உருவாக்க விரும்புகிறேன். நாம் சிங்களவராக, தமிழராக முஸ்லிம்களாக, அல்லது வேறு எந்த இனத்தவராக இருந்தாலும் சரி, இது எமது தாய்நாடாகும். நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்பதை மறக்கக் கூடாது. நாம் ஒன்றிணைந்து இந்த நாட்டை முன்னேற்றுவோம்.

முதல் போராட்டம் முடிந்து விட்டது. நாட்டைக் கட்டியெழுப்ப இரண்டாவது போராட்டத்தை இங்கிருந்து ஆரம்பிப்போம். அச்சமின்றி ஒன்றிணைந்து முன்னேறுவோம். சிறந்த இலங்கையை உருவாக்குவோம்."

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார கருத்துத் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைநோக்குடைய தலைவர் என்பதை அனைவரும் அறிவார்கள் .கட்சியின் ஒரேயொரு உறுப்பினராக பாராளுமன்றத்துக்குச் சென்ற ரணில் விகிக்ரமசிங்க, பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் பதவியேற்று மௌனமாக செயற்பட்டு வருகிறார். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் இளைஞர்களை பலப்படுத்துவதற்கும் அவசியமான அறிவு அவரிடம் இருக்கின்றது.இப்போது சுக்கான் அவரது கைக்கு வந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினரின் உள்ளங்களை குணப்படுத்த நாம் போராட வேண்டும். நாம் அந்த போராட்டத்திலும் வெற்றி பெற வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை பலமாக கட்டியெழுப்பிய கட்சியே தவிர நாட்டை பலவீனப்படுத்திய கட்சி அல்ல" என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் உரையாற்றுகையில், "ஐக்கிய தேசியக் கட்சி எப்போதுமே நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது. சுதந்திரத்தின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தியது. 1977 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி 24 மணி நேரத்தில் வரிசைகளை அகற்றியது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் முதல் பணியாக வாழ்க்கைச் செலவைக் குறைக்கவே பாடுபட்டது. அன்று நாம் கணினி கொடுத்த போது, எதிர்காலத்தைப் பார்க்காத தலைவர்கள் அதை விமர்சித்தார்கள்.

ஆனால், கொரோனா தொற்றுநோய் வந்தபோது, நமது கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்பதை முழு நாடும் உணர்ந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றிணைத்து பயணத்தை ஆரம்பித்துள்ளார்" என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன உரையாற்றுகையில் "28 வருடங்களின் பின்னர் எமது ஜனாதிபதியுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதில் பெருமையடைகிறேன். கட்சிக்காக உயிர்த்தியாகம் செய்த அனைவரையும் இங்கு நினைவு கூர வேண்டும். கட்சி வீழ்ச்சியடைந்த போது கட்சியை விட்டு விலகாத உங்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமது நாட்டை உலகுக்கு அறிமுகப்படுத்தவே இந்த கட்சியை நமது தலைவர்கள் உருவாக்கினார்கள்.

நாங்கள் ஒருபோதும் இனவாதம் அல்லது மதவாதத்தில் ஈடுபடவில்லை. தீவிரவாதத்திற்கு நாங்கள் ஒருபோதும் பணிந்ததில்லை. தலைவர்கள் பலரும் சவாலை ஏற்காது பின்வாங்கிய போது நாட்டைப் பற்றிச் சிந்தித்து எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே சவாலை ஏற்றுக்கொண்டார்" என்றார். சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பேசுகையில் "இந்த இடம் எனக்கு புதிதல்ல. கோபித்துக் கொண்டு வீட்டை விட்டுச் சென்று விட்டு தந்தையிடம் திரும்பி வந்ததாகவே உணர்கிறேன். மீண்டும் திரும்பி எங்கும் செல்ல மாட்டேன். ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையில் பெரும் சவாலான காலகட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. நான் எப்போதுமே சவால்களுடன் அரசியல் செய்துள்ளேன். பாராளுமன்றத்தில் தனியொரு மனிதனாக ஜனாதிபதி இந்த பயணத்தை ஆரம்பித்தார். தவறான முடிவுகளால் புதையலுக்கு மேலதிருந்து பிச்சை எடுக்கும் நாடாக இந்த நாடு மாறிவிட்டது. சிலர் நெல்சன் மண்டேலாவையும் லீக் வான் யூவையும் தேடினார்கள். எமக்கு இப்போது தேவை ஒரு ரணில் விக்கிரமசிங்க. இந்த சவால் எளிதான ஒன்றல்ல. இதுபோன்ற முடிவுகளை எடுக்க தைரியம் வேண்டும். நாட்டை ஸ்திரப்படுத்த அனுமதிக்காதவர்களுக்கு எதிராக நாளை மறுதினம் இரண்டாவது போராட்டத்தை ஆரம்பிப்போம்.இந்த நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காக ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவோம்" என்றார்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

பூநகரி வலைப்பாடு சம்பவம்

# நீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்பு

## கடற்படை அதிகாரியுடன் அமைச்சர் டக்ளஸ் பேச்சு



பூநகரி, வலைப்பாடு பகுதியில் கடற்றொழிலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, கடற்படை அதிகாரியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று (07) கடற்றொழில் அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார். அமைச்சுக்கு வருகை தந்த கடற்படை அதிகாரியை சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு, நீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இவ்வாறான விரும்பத்தகாத விடயங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் இந்தியக் கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகள் உட்பட இலங்கை கடற்பரப்பில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவதற்கு கடற்படையினரின் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்களை இன்னும் அதிகளவில் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது, வலைப்பாடு விவகாரம் தொடர்பாக உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கடற்படை அதிகாரி, இரண்டு தரப்பிலும் தவறுகள் இருப்பதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதில் காணப்படும் நடைமுறை பிரச்சினைகள் தொடர்பாகவும் கடற்படை அதிகாரியினால் கடற்றொழில் அமைச்சரிடம் எடுத்துரைக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்த நிலையில், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு, நடைமுறைரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கையாளுமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா நேற்றைய தினம் புதன்கிழமை நடைபெற்றது. காலை 7 மணியளவில் நடைபெற்ற வசந்த மண்டப பூஜையை அடுத்து, துர்க்கை அம்மன் உள் வீதியுலா வந்து 9 மணியளவில் தேரில் ஆரோகரித்து பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தார். தேர்த் திருவிழாவில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

படம்: யாழ். விசேட நிருபர்

# வர்த்தக நிலையங்களுக்கு நாளை விடுமுறை

நாகர்கோவில் விஷேட நிருபர்)

நெல்லியடி வர்த்தக சங்க எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் நாளை வெள்ளிக்கிழமை(09) விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய தேர்த் திருவிழாவினை முன்னிட்டு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருக்குமென நெல்லியடி வர்த்தக சங்க செயலாளர் இ.சுரேரஞ்சன் அறிவித்துள்ளார்.

# யாழ்.மாநகர சபைக்கு கழிவகற்றும் பாரவூர்திகளை இறக்குமதி செய்ய ஒத்துழைப்பு வழங்கவும்

## ஜப்பான் தூதரகத்திடம் பிரதி முதல்வர் கோரிக்கை

கோப்பாய் குறூப் நிருபர்

ஜப்பான் நாட்டினால் யாழ்.மாநகர சபைக்கு வழங்கப்படவிருந்த கழிவகற்றும் பாரவூர்திகளை இறக்குமதி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜப்பான் தூதரகத்திற்கு யாழ். மாநகர பிரதி முதல்வர் துரைராசா ஈசன் எழுத்து மூலமாக கடிதமொன்றை நேற்று(07) புதன்கிழமை அனுப்பியுள்ளார்.

அவர் தனது கடிதத்தில், யாழ் மாநகரசபைக்கு கழிவுகளை சேகரிக்கும் பாரவூர்திகளை வழங்கும் திட்டத்தை தந்தமைக்கு நன்றி கூறுகிறேன்.

யாழ்.மாநகர சபையின் நலனுக்காக கடந்த காலங்களில் நீங்கள் மேற்கொண்ட அயராத முயற்சி துரதிஷ்டவசமாக தாமதமடைந்தமை வருத்தத்துக்குரியது. இவ் விடயத்தில் ஏற்பட்ட அசௌகரியத்திற்கு நான் உங்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன்.



அரசாங்கத்திற்கு தேவையான ERD அனுமதி தேவைப்படுவதற்கு 2020, 2021ற்கு இடையில் கொவிட் 19 வைரஸின் தாக்கம் மற்றும் அரசியல் மற்றும் தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடி என்பன இதற்கு காரணமாகவிருந்தது. யாழ்.நகரம் மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரால் முற்றிலும் பாதிக்கப்பட்டிருந்தது. இன்று வரை நகரின் மக்கள் தொகை வளர்ச்சியை சமாளிக்கும் வகையில், நகரின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படவில்லை.

அண்மையில் ஜனாதிபதியை சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வாகன இறக்குமதி அனுமதி தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு ஆரோக்கியமானதாக அமைந்துள்ளது. பாரவூர்திகளின் இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக அறிகிறேன்.எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், இத்திட்டத்தை நிறுத்துவதற்கான உங்கள் அட்டவணையை மீண்டும் பரிசீலித்து, திட்டத்தை நிறுத்தாமல் செயற்படுத்த தேவையானதை செய்து தருமாறு அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.செம்மணி படுகொலை நினைவுதினம் அனுஷ்டிப்பு

யாழ். விசேட நிருபர்



யாழ்.செம்மணி பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருசாந்தியின் 26ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றைய தினம் புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது செம்மணி பகுதியில் படுகொலை செய்யப்பட்ட ஏனையவர்களும் நினைவு கூரப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. 1996ஆம் செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி யாழ். சுண்டிக்குளி கல்லூரி மாணவி கிருஷாந்தி (வயது 18) வீதியால் சென்று கொண்டிருந்த வேளை செம்மணி பகுதியில் அப்போதிருந்த இராணுவ முகாமில் வழிமறித்த இராணுவத்தினர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டு கழுத்தை நெரித்துபடுகொலை செய்திருந்தனர்.

செம்மணி இராணுவ முகாமில் கிருஷாந்தியை தடுத்து வைத்திருந்ததை ஊரவர்கள் கண்ணுற்று மாணவியின் தாயாரிடம் கூறியதையடுத்து, மாணவியின் தாயாரான ஆசிரியை குமாரசாமி இராசம்மா (வயது 59) மாணவியின் சகோதரனான யாழ்.பரியோவான் கல்லூரி மாணவனான குமாரசாமி பிரணவன் (வயது 16) மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசிக்கும் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் உதவியாளராக கடமையாற்றிய சிதம்பரம் கிருபாமூர்த்தி (வயது 35) ஆகியோர் மாணவியை தேடி சென்று செம்மணி இராணுவ முகாமில் விசாரித்த வேளை அவர்கள் மூவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்தனர்.

அன்றைய தினம் நள்ளிரவு படுகொலை செய்யப்பட்ட நால்வரின் உடல்களையும் செம்மணி பகுதியிலுள்ள வயல் வெளியில் இராணுவத்தினர் புதைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு

சாவகச்சேரி விஷேட நிருபர்

மக்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் முகமாக நேற்று புதன்கிழமை சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் மரக்கறி நாற்றுக்கள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கமைவாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பிரதேச செயலக சிறுவர் மேம்பாடு மற்றும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்திற்கும் மனிதஉரிமைக்குமான நிலைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களுக்கு வீட்டுத்தோட்டச் செய்கைக்கான மரக்கறிக் கன்றுகள் மற்றும் நாற்றுக்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெல் விற்பனையில் இழுபறி நிலை; கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கவலை

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை நியாமான விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வட மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. உரம்,எரிபொருள் போன்ற பல்வேறு தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் அறுவடையில் பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார மத்திய நிலையம், மற்றும் கண்டாவளை நெற்களஞ்சியசாலைகள் நெல் கொள்வனவு செய்வதாக அறிவித்துள்ள போதும் தற்போது விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவை நிறுத்தியுள்ளதாக தெரிவிப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் இச்சந்தர்பத்தை பயன்படுத்தி தனியார் நெல்லுக்கான விலையை வீழ்த்தி மிகதுறைவான விலையில் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக குற்றம்சாட்டுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 28 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டனர். உரம் மற்றும் களைநாசினி போன்ற தட்டுப்பாட்டினால் உற்பத்தியில் வீழ்ச்சி கண்டுள்ளோம். 32 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லை அறுவடையாக பெற்றுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# பொலிஸ் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் சிரமதானம்



ஓமந்தை விஷேட நிருபர்

156ஆவது பொலிஸ் தினத்தினை முன்னிட்டு நேற்றையதினம் வவுனியாவில் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது பொலிஸாரினால் புகையிரத நிலையம் மற்றும் அதனை அண்டிய வீதிகளில் சிரமதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது வவுனியா பொலிஸார், சுகாதார பரிசோதகர், புகையிரத நிலைய ஊழியர்கள், நகரசபையினர் இணைந்து சிரமதான பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சென். மேரிஸ் வித்தியாலயத்தில் மணி விழா காணும் ஏழு ஆசிரியைகள்



தலைமன்னார் விஷேட நிருபர்

சென்.மேரிஸ் வித்தியாலயத்தில் மணிவிழா காணும் ஏழு ஆசிரியைகளுக்கு கௌரவிப்பு விழாவும் நூல் வெளியீடும் இன்று நடைபெறவுள்ளது.

மன்னார் கல்வி வலயத்திலுள்ள பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலயத்தில் கல்வி கற்பித்த ஏழு ஆசிரியைகளுக்கு மணிவிழாவும் அத்துடன் நூல் வெளியீட்டுவிழாவும் இன்று இடம்பெற்றுள்ளது.

பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலயத்தில் நீண்டகாலமாக ஆற்றல்மிகு ஆசிரியர்களாக இருந்து அரும்பணியாற்றி கற்பித்து தற்பொழுது ஓய்வுபெற்றுச் சென்றுள்ள ஆசிரியர்களான மேரி வசந்தி மருசலின் குரூஸ், ஜேன் காமலிற்றா லெம்பேட். நாகராசா நிர்மலா லுமினா. ஜாக்குலீன் (அமிற்றா) கொன்சால் வாஸ் கூஞ்ஞ, அமலவதி ஜெயசீலி லீனஸ் கூஞ்ஞ. பிறிசில்லா செல்வராணி ரெக்ஸ் பீரிஸ். அனற் அருந்ததி தேவகுமார் ஆகியோரின் பெறுமதி மிக்க சேவைகளை பாராட்டியே பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் யாவரும் இணைந்து சேவைநலன் பாராட்டு விழாவை நடாத்துகின்றனர்.

இத்துடன் இவ்விழாவில் கௌரவிக்கப்படும் ஆசிரியை மேரி வசந்தி மருசலின் குரூஸினால் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்காக ஆக்கப்பட்ட 'இசையால் இசைவோம்' என்னும் நூல் மற்றும் இறுவட்டு வெளியீடும் இங்கு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் பனை விதைகள் நடுகை

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் சுயாதீன இளைஞர்களால் பனை விதைக்கும் செயற்பாடு நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு தொடக்கம் சுயாதீன இளைஞர்களால் ஒவ்வொரு ஆண்டும் வவுனியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பனை விதை விதைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக தற்சார்பு பொருளாதாரத்தை ஏற்படுத்தல், எதிர்கால மாணவர்கள் மத்தியில் சிறப்பான பொழுதுபோக்கினை ஏற்படுத்தல், மற்றும் பாரம்பரிய உணவினை மீட்பது போன்ற விடயங்களை நோக்காக கொண்டு பனை விதை விதைப்பு நடவடிக்கையினை சுயாதீன இளைஞர்களால் வருடந்தோறும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321
சுபகிருது வருடம் ஆவணி மாதம் 23ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று

*உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவர்களின் முன்னிலையில் பேசுதல், வளரக்கூடிய பயிர் உள்ள பாத்தியில் நீர் பாய்ச்சுவது போலப் பயன் விளைக்கும்.*

## ஜனாதிபதி விடுத்துள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க அழைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் 76 ஆவது வருடாந்த நிறைவு விழா கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வடக்கு, கிழக்கு உட்பட நாடெங்கிலும் இருந்து பெருந்திரளான ஆதரவாளர்கள் பங்குபற்றியுள்ள நிறைவுவிழா 'ஒன்றாய் நாட்டைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க காலகட்டத்தில் இவ்விழா நடைபெற்றுள்ளது. இந்நாடு சுதந்திரமடைவதற்கு முன்னர் சுதந்திரம் பெற்றுக் கொள்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி, அதன் வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் நாட்டை ஆட்சி செய்துள்ளதோடு, நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்திற்காக அளப்பரிய சேவைகளையும் ஆற்றியுள்ளது.

நாடு பொருளாதார ரீதியில் பாரிய சவாலுக்கு முகம் கொடுத்துள்ள தற்போதைய சூழலில், கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டின் ஜனாதிபதிப் பதவியை ஏற்று இருக்கின்றார். அந்நிய செலாவணி பற்றாக்குறையினால் தோற்றம் பெற்றுள்ள இப்பொருளாதார நெருக்கடியினால் நாடும் மக்களும் பலவிதமான அசௌகரியங்களையும் அழுத்தங்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் ஜனாதிபதி தலைமையில் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சூழலில் நடைபெற்றுள்ள ஐ.தே.கவின் 76 ஆவது வருட நிறைவு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'ஐ.தே.க, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி என எந்தக் கட்சியானாலும் நாம் அனைவரும் ஒருதாய் மக்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது முதலாவது போராட்டம் நிறைவடைந்துள்ளது. என்றாலும் நாட்டை மீட்டெடுப்பதற்கான இரண்டாவது போராட்டம் இப்போது தான் ஆரம்பமாகியுள்ளது. இப்போராட்டத்தில் கட்சி பேதமின்றி இணைந்து செயற்பட முன்வருமாறு அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அழைப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நாடு சுதந்திரமடைந்து ஏழு தசாப்தங்கள் கடந்துள்ள போதிலும், இன்னும் நாடு வளர்முக நாடாகவே உள்ளது. ஆனால் இந்நாடு சுதந்திரமடையும் போது இந்நாட்டை விடவும் கீழ் மட்டத்தில் காணப்பட்ட பல நாடுகள் இன்று இந்நாட்டை விடவும் பல மடங்கு முன்னேற்றமடைந்து விட்டன. இலங்கையை முன்மாதிரியாகக் கொண்டுதான், லீ கியான் யூ சிங்கப்பூரைக் கட்டியெழுப்பினார். இப்பிராந்தியத்தில் மிகவும் பின்னடைவுக்கு உள்ளாகி இருந்த நாடான பங்களாதேசம் கூட இன்று இலங்கையை விடவும் பல துறைகளில் பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ளது. ஆனால் இந்நாடு தொடர்ந்தும் பின்தள்ளப்பட்டே செல்கிறது.

நாடொன்றின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் தேவையான வளங்களும் வாய்ப்புகளும் நிறைவே இங்குள்ளன. அப்படி இருந்தும் இந்நாடு தொடர்ந்தும் பின்னடைந்து செல்வதுதான் ஆச்சரியமான விடயமாக உள்ளது. இதற்கு நாடு என்ற அடிப்படையில் ஒன்றுபட்டு செயற்படாமல் கட்சிகளாகப் பிரிந்து செயற்படுவது முக்கிய காரணமாகும். ஏனென்றால் இந்நாட்டை விடவும் பின்னடைவுக்கு உள்ளாகி இருந்து, தற்போது இந்நாட்டை விடவும் முன்னேறியுள்ள நாடுகளை எடுத்துப் பார்த்தால், அந்நாடுகளிலும் அரசியல் கட்சிகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் அக்கட்சிகள் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களின் போது கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படும் போக்கை கடைப்பிடித்து வருவது சுட்டிக்காட்டத்தக்கது.

அவ்வாறான நிலைமை இங்கு காணப்படாததன் விளைவாகவே இந்நாடு தொடர்ந்தும் மூன்றாம் மண்டல நாடாக இருந்து கொண்டிருப்பதோடு, தற்போது பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்நெருக்கடியில் இருந்து விரைவாகவும் வேகமாகவும் மீட்சி பெற வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அதன் காரணத்தினால் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து, ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று, நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக கட்சி பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாகவும் பங்களிப்பாகவும் அமையும். அது நாட்டின் விமோசனத்திற்கு வித்தூன்றும் பணியாகவும் விளங்கும். அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதே இன்றைய அவசியத் தேவை என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# கண்டி மாவட்டத்தில் மண்சரிவு அபாயமுள்ள இடங்களில் அரச அதிகாரிகள் நேரடி களஆய்வு

கண்டி மாவட்டத்தில் மண்சரிவு காரணமாக பாதிக்கப்படக் கூடிய குடும்பங்களின் நிலைவரம் மற்றும் இடங்கள் குறித்து நேரடியாக கள விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற இந்த கள விஜயம் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னக்கோன், தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க உள்ளிட்ட குழுவினர் தலைமையில் இடம்பெற்றது.

கண்டி கங்கவட கோரல பிரதேச செயலகம், கண்டி மாநகர சபை மற்றும் பூஜாபிட்டிய பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பல இடங்களில் உள்ள மிக அபாயகரமான இடங்கள் இந்த விஜயத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன



சுதுஹும்பொல கிழக்கு மற்றும் மேற்கு கிராம சேவையாளர் பகுதியில் 57 குடும்பங்களும் பூவேலிக்கடை பகுதியில் 07 வீடுகளும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. அவற்றை அகற்றுதல் மற்றும் மாற்று இடத்தில் மக்கள் மீள்குடியேற்றப்படுதல், தற்பொழுது மக்கள் வசிக்கும் இடத்தை பாதுகாப்பான வகையில் உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களில் அதிகாரிகள் அவதானம் செலுத்தியுள்ளனர்.

மேலும் நலிவடைந்த குடும்பங்களை வெளியேற்றினால் அரசு வழங்கும் இழப்பீட்டுத் தொகையில் நிலம் வாங்கவோ அல்லது புதிய வீட்டுநிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவோ முடியாது என பாதிப்புக்குள்ளான குடியிருப்பாளர்கள் கூறுகின்றனர்.

அதற்குப் பதிலளித்த கண்டி மாவட்ட செயலாளர், வசிப்பதற்கு முன்னர் முறையாக நிலத்தை உறுதிப்படுத்துவதே மிகவும் பொருத்தமானது என சுட்டிக்காட்டினார். கண்டி மாவட்டத்தில் அனைத்து பாதிக்கப்படக் கூடிய பகுதிகளும் இயற்கையான காரணங்களால் அன்றி, முறையற்ற மனித நடவடிக்கைகளாலேயே



இந்த நிலைமைக்கு உள்ளாகியுள்ளன. மனித நடவடிக்கைகளே இதற்குக் காரணம் எனவும், குறித்த காணியை உரிய முறையில் ஆய்வு செய்ய முடியுமெனவும் மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டினார்.

பேராதனை நகரம் உட்பட பல இடங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். ஆகவே, இதன் பொழுது முன்னெடுக்கப்படும் தற்காலிக பணிகளுக்கு பதிலாக, குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிரந்தரத் தீர்வுகளைத் முன்னெடுப்பதே முக்கியமானது என்றும் மாவட்டச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், கண்டி மாநகர சபை, தேசிய நிவாரண சேவைகள் நிலையம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இந்த கண்காணிப்பு பணிகள் இடம்பெற்றன.

**எம்.ஏ.அமீனுல்லா...**

# சீனாவிடமிருந்து தரமற்ற பசளையை கொள்வனவு செய்ய முற்பட்டதால் இலங்கை அடைந்த நஷ்டம் அதிகம்!

சீனாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட உரம் தொடர்பான விமர்சனங்கள் இன்னும் தொடர்ந்தபடியே உள்ளன. சீனாவின் உரம் தரமற்றதெனத் தெரிவிக்கப்பட்டு அந்நாட்டுக்கே திரும்பிச் சென்ற போதிலும், அதனால் இலங்கைக்கு ஏற்பட்ட நஷ்டம் தொடர்பாக இன்னும் விமர்சனங்கள் தொடர்கின்றன.

சீனாவில் இருந்து இலங்கைக்கு உரத்தை இறக்குமதி செய்து 69 இலட்சம் டொலர்கள் நஷ்டத்தை ஏற்படுத்து விட்டதாக அவ்வேளையில் ஆட்சியிலிருந்த ஒருசிலர் மீது கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

அதேசமயம் சீனாவின் கிங்டாவோ சீவின் பயோடெக் நிறுவனத்தை கறுப்புப் பட்டியலில் சேர்க்குமாறு பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

சீன நிறுவனத்தின் உரத்தின் மாதிரிகள் கிருமி நீக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அவை தீங்கு விளைவிக்கும் பக்டீரியாவைக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன.

சீனாவின் உர வழங்குநரான, கிங்டாவோ சீவின் பயோடெக் நிறுவனம் கடந்த 2021 செப்டம்பர் மாதம் 20,550 மெட்ரிக் தொன் உரத்தை கொழும்பு துறைமுகத்திற்கு அனுப்பியிருந்தது. அந்த உரம் தாவர தனிமைப்படுத்தல் சட்டத்தின்படி நுண்ணுயிர் தொற்றுநீக்கம் செய்யப்படாததால், அதனை இலங்கையில் தரையிறக்குவதில் நீண்ட நாள் சர்ச்சை நிலவியது.

அந்த இழுபறியின் பின்னர் உரத்தை இறக்குமதி செய்த இரண்டு அரச நிறுவனங்களான இலங்கை உரக் கம்பனி மற்றும் கொமர்ஷல் உரக் கம்பனி என்பன சீன நிறுவனத்துக்கு பணம் வழங்க மறுத்ததோடு கொழும்பு வர்த்தக மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து கொடுப்பனவை நிறுத்துவதற்கான உத்தரவைப் பெற்றிருந்தன.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதுடன், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவிலும் நெருடலை ஏற்படுத்தியிருந்தது. சட்ட மாஅதிபரின் ஆலோசனையின் பேரில் இணக்கப்பாட்டின் மூலம் தீர்வு காண்தற்கு அமைச்சரவையின் அங்கீகரிக்காரத்துக்கமைய, கப்பலில் உள்ள உரத்தில் 75% இருப்புக்கான கட்டணமாக 6.9 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டது



அதன்படி, தேவையான கலவை மற்றும் தரம் கொண்ட உரங்களை அதே நிபந்தனைகளின்படி மீண்டும் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தொடர்புடைய வழக்கு மீளப்பெறப்பட்டது.

எனினும், இதுவரையில் இலங்கைக்கு எதிர்பார்த்த தரமான உரம் எதுவும் சீனா நிறுவனத்தினால் அனுப்பப்படவில்லை. இதனால் உரத்துக்காக செலுத்தும் தொகை காரணமாக அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

## பயிர்களுக்கு ஊட்டமளிக்கும் பசளைக்குள் மறைந்திருந்த தொற்றுக்கிருமிகள்!

அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் தொடர்பாக இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து அத்தொகையை வசூலிக்குமாறு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



சர்ச்சைக்குரிய அந்த உரக்கப்பலின் பெயர் ஹிப்போ ஸ்பிரிட். கடந்த செப்டம்பர் மாதம் சீனாவில் இருந்து 20,000 தொன் இயற்கை உரங்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கி அக்கப்பல் புறப்பட்டது.

இலங்கையை இயற்கை விவசாய நாடாக மாற்றும் நோக்கில் அனைத்து இரசாயன உர இறக்குமதிகளையும் அரசு நிறுத்தியிருந்ததால், இத்தகைய இயற்கை உர இறக்குமதி இலங்கைக்குத் தேவைப்பட்டது.

'பிரச்சினை உரத்தின் தரத்தில் உள்ளது. இது பயிர்கள் செழித்து வளர உதவுவதற்குப் பதிலாக அவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது' என்று விஞ்ஞானிகள் கூறுயுள்ளனர்.

"சீன உரம் கிருமிகள் நீக்கப்பட்டதல்ல என்பது உரமாதிரிகள் மீதான எங்கள் சோதனைகள் மூலம் தெரியவந்தது" என்று இலங்கை விவசாயத் திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.

"கரட் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற தாவரங்களுக்கு தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்களை நாங்கள் கண்டறிந்தோம்" என்கிறார் விஞ்ஞானி ஒருவர்.

ஒக்டோபர் மாத பிற்பகுதியில் இலங்கை துறைமுக அதிகாரிகள் ஹிப்போ ஸ்பிரிட் கப்பலின் பொருட்களை இறக்குவதற்கு அனுமதி மறுத்த போது, அக்கப்பல் கொழும்பு துறைமுகத்தை விட்டு நகர்ந்து சென்றது.

ஆசியாவில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக பெல்ட் அண்ட் ரோட் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கு பல பில்லியன் அமெரிக்க டொலர்களை சீனா கடனாக வழங்கியிருக்கிறது. இருப்பினும் எல்லா நிதியுதவியும் இலங்கைக்கு சாதகமாக இருக்கவில்லை.

உதாரணத்துக்கு, 2017 ஆம் ஆண்டில், பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த அம்பாந்தோட்டைதுறைமுகத்தைகட்டியெழுப்புவதற்காக வாங்கிய கடனை அடைக்க இலங்கை திணறிய போது, அதன் பெரும்பகுதியை சைனா மெர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் 99 ஆண்டு குத்தகைக்கு எடுத்திருந்தது.

ஆனால், என்னதான் சீனா பொருளாரத்தில் வலிமையாக இருந்தாலும், விதிமுறைகளை மீறும் எந்த இயற்கை உரமும் நாட்டிற்குள் அனுமதிக்கப்படப் போவதில்லை என்பதற்கு சீன உர விவகாரம் நல்லதொரு உதாரணமாகும்.

"வேறொரு தொகுதியிலிருந்து புதிய மாதிரிகளை அனுப்புமாறு சீன நிறுவனத்திடம் திட்டவட்டமாகக் கூறிவிட்டோம். புதிதாக அனுப்பப்படும் மாதிரி தரப் பரிசோதனையைக் கடந்துவிட்டால், அவர்கள் புதிய உரத் தொகுதியை அனுப்பலாம்" என்று அரசாங்க தரப்பு முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்று செல்லும் நால்வருக்கு பெரியநீலாவணையில் பிரியாவிடை

கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மகாவித்தியாலயத்தில் நீண்ட காலம் ஆசிரியர் சேவையாற்றிய நான்கு ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதை முன்னிட்டு பாடசாலை ஆசிரியர் சமூகம் மற்றும் கல்வி சமூகம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த பிரியாவிடை நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எம்.முஹம்மட் நியாஸ் தலைமையில் பிரதி அதிபர் எம். சி. நசார் ஒருங்கிணைப்போடு பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளோடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வின் போது ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கு அவர்களின் சேவையை நினைவு கூர்ந்து வாழ்த்துப்பா வாசித்து கையளிக்கப்பட்டதுடன், பொற்கிழி பணப்பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. பின்வருவோர் ஓய்வு பெற்று செல்லும் ஆசிரியர்களாவர்.

### திருமதி எம்.ஐ.ஹிபத்துன்னிஷா:

ஆசிரியர் சேவையில் 36 வருடங்களை பூர்த்தி செய்துவிட்டு ஓய்வு பெற்று செல்லும் இவர் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் திகதி பொலன்னறுவை புதூர் முஸ்லிம் வித்தியாலயத்தில் தனது முதல் நியமனத்தை பெற்றார். பின்னர் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் ஆசிரியர் சேவையை புரிந்து 2009 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். இங்கு 12 வருடங்கள் சிறப்பாக ஆசிரியர் சேவையாற்றினார். அவர் பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார்.





### திருமதி சம்சுன் நஹார் ராசிக் பரீட்:

1988 ஆம் ஆண்டு ஆரம்பநெறி ஆசிரியராக, ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்ட இவர், அக்கரைப்பற்று ரி.பி ஜாயா வித்தியாலயம், மருதமுனை அல் மதீனா வித்யாலயம், மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி, புலவர்மணி சரிபுத்தீன் மகாவித்தியாலயம் என 33 வருட காலம் ஆசிரியர் சேவையை சிறப்பாக பூர்த்தி செய்துவிட்டு 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் ஓய்வு பெற்றுள்ளார். இவர் புலவர்மணி பாடசாலையில் 28 வருடங்கள் ஆசிரியர் சேவையாற்றினார்.

### திருமதி ஹித்தரத்துல் புஹாரியா அக்பர்:

ஆசிரியர் சேவையில் 1990 ஆம் ஆண்டு முதல் நியமனத்தை பெற்றுக் கொண்ட இவர், பல பாடசாலைகளில் ஆசிரியராக பணிபுரிந்து இறுதியாக 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி புலவர்மணி சரிபுத்தீன் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று ஆசிரிய சேவையில் ஈடுபட்டு 2022 மார்ச் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் ஓய்வு பெற்றார். இவர், புலவர்மணியில் 21 வருடங்கள் ஆசிரியர் சேவை புரிந்துள்ளார்.

### ஏ.கே.எம்.சமீம்:

இலங்கை ஆசிரியர் சேவையில் 30 வருடங்களை பூர்த்தி செய்துள்ள இவர், 1990 ஆம் ஆண்டு தனது முதல் ஆசிரியர் நியமனத்தை பொலன்னறுவை புதூர் முஸ்லிம் வித்யாலயத்தில் பெற்று நீண்ட காலமாக ஆசிரியர் சேவையில் பணியாற்றி வந்தார். 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ள இவர், புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலத்தில் 10 வருடங்கள் ஆசிய சேவை மேற்கொண்டுள்ளார்.

**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# கிழக்கின் குரல்



# திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வு; உயர் மட்ட கலந்துரையாடல்

## பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள் எதிர்ப்பு; முடிவின்றி முடிவடைந்த கூட்டம்



**திருக்கோவில் தினகரன் நிருபர்**

திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக ஆராயும் உயர் மட்ட கலந்துரையாடல் கூட்டம் நேற்று திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் ஒழுங்கமைப்பில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.எல். டக்ளஸ் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேசத்தில் சுமார் 3 கிலோமீற்றர் தூரத்திற்கு இல்மனைட் அகழ்வுகள் மேற்கொள்வதற்கான முன்னாயத்த பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதனால் இல்மனைட் அகழ்வுக்கான அனுமதிகள் வழங்குவது தொடர்பாக ஆராயும் பொருட்டே இக் கூட்டம் நடைபெற்றது.

அகழ்வுப் பணிகளுக்காக கரையோர பாதுகாப்பு திணைக்களம், புவிச்சரிதவியல் திணைக்களம் என்பன தமது சம்மதங்களை தெரிவித்து இருந்த போதும் திருக்கோவில் பிரதேசசபை மற்றும் திருக்கோவில் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்தின் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக இங்கு ஆராயப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர்,

இவ் வேலைத்திட்டத்தின் ஊடாக சுமார் 50 மில்லியன் டொலர்கள் நாட்டுக்கு இலாபமாக கிடைக்கவுள்ளதுடன் இப்பிரதேசத்தில் பல்வேறு பாரிய பௌதிக ரீதியான அபிவிருத்தி பணிகளும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதற்கான அனுமதிகள் வழங்குவது தொடர்பாக பொது மக்களை விழிப்புணர்வு செய்வதோடு ஒரு கண்காணிப்பு குழு ஒன்றினையும் அமைக்கவுள்ளதாகவும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

அத்தோடு திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் இல்மனைட் அகழ்வுக்கு அனுமதி வழங்க முடியாது என தமது தீர்மானத்தை முன்வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து இல்மனைட் அகழ்வுக்கு சார்பாகவும் எதிராகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இறுதி தீர்மானம் ஏதும் எட்டப்படாத நிலையில் கூட்டம் நிறைவு பெற்றது.

## காத்தான்குடி கடற்கரையில் கடலரிப்பு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி கடற்கரையில் கடலரிப்புக் காரணமாக அப்பகுதி மீனவர்கள் மற்றும் கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளதாக அப்பகுதி மீனவர்களும் பொது மக்களுக்கும் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஒருவாரத்துக்கும் மேலாக இங்கு கடலரிப்பு ஏற்பட்டு வருவதுடன் காத்தான்குடி கடற்கரையின் ஏத்துக்கால் பகுதியிலேயே கடலரிப்பு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள மீன்பிடி படகுகள் கரையை அண்மித்த வீதியின் ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியிலுள்ள சிற்றுண்டிச்சாலைகள், கட்டடங்கள், மரங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

இந்தக் கடலரிப்புக் காரணமாக மீன்பிடி படகுகளை கடலுக்கு கொண்டு செல்வதிலும் மீனவர்கள் சிரமங்களை சந்தித்துள்ளனர்.

கடலரிப்பை தடுக்க கடற்றொழில் திணைக்களம் மற்றும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்களும் அதிகாரிகளும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## சவளக்கடை பொலிஸ் நிலையத்தில் 156 ஆவது பொலிஸ் தினம்



**சவளக்கடை குறூப் நிருபர்**

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 156 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு சவளக்கடை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை (03) பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

சவளக்கடை பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பாடல் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.ஜஃபரின் ஏற்பாட்டில் சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.எஸ்.கே. தசநாயக தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல். புத்திக பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது பொதுமக்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ முகாம் இடம்பெற்றதுடன், ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் சிவில் பாதுகாப்பு ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கான அடையாள அட்டையும், சேவையில் சிறப்பாக செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கி வைக்கப்பட்டது.

## கதிரவன் பட்டிமன்றப் பேரவையின் 99ஆவது பட்டிமன்றம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

கிழங்கிலங்கையில் புகழ்பெற்ற மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கதிரவன் பட்டிமன்றப் பேரவையின் 99ஆவது சிறப்பு பட்டிமன்றம் செவ்வாய்க்கிழமை (06) மட். பட். குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மாணவர்களின் புறகிருத்தியங்கள், இணைப்பாடவிதானம் மற்றும் பேச்சு, விவாதப் போட்டிகளில் ஈடுபாடுகளை மேம்படுத்துவதற்காக வேண்டி இப்பட்டிமன்றம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வித்தியாலய அதிபர் புஸ்பராஜாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கதிரவன் பட்டிமன்ற போர்வையின் தலைவர் கதிரவன் த.இன்பராஜா உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டு மாணவர்களுக்குத் தேவையான கருத்துக்களை முன்வைத்தனர்.



இலங்கை பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 156 வருட பூர்த்தியை முன்னிட்டு இறக்காமம் பொலிஸ் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.எம்.மஹிந்த சேனாரத் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது அதிதிகளினால் தேசிய கொடி ஏற்றி வைத்த பின்னர் ஊனமுற்ற மற்றும் ஓய்வு பெற்றுச்சென்ற 10 பொலிஸார் பாராட்டி கௌரவிக்கப்பட்டதையடுத்து அதிதிகளுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம். இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ்.ஜெமீல் காரியப்பர், பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஷான் உள்ளிட்ட அதிதிகளும் காணப்படுகின்றனர். (படம்: இறக்காமம் தினகரன் நிருபர்)

# பொத்துவிலில் 38 ஆவது நூறு நாள் உரிமை போராட்டம்

**காரைதீவு குறூப் நிருபர்**




வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற நூறு நாட்கள் செயல்முனைவின் ஓரங்கமாக நேற்று (7) புதன்கிழமை பொத்துவிலில் 38 ஆவது நூறுநாள் உரிமை போராட்டம் நடைபெற்றது.

இதன் கருப்பொருள் 'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' என்பதாகும்.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பிரதேசத்தில் பவனியாக வருகை தந்த மக்கள் இவ்வாறான கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

நாங்கள் நாட்டை துண்டாக்கவோ தனியரசு கேட்கவோ வில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்.

அந்த அடிப்படையில், மக்கள் ஒன்றிணைந்து தங்களுக்கான வாழ்வியல் உரிமையை கேட்கின்ற நிகழ்வாக இந்த நிகழ்வு நூறு நாள் செயல்முனைவின் 38 ஆவது நாளான நேற்று அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றது.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

# ஒன்பதாவது இடத்திலிருந்த கிழக்கு மாகாணம் முதலிடத்தில்

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**



உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வில் கிழக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்திலிருந்து முதலிடம் பெற்றமைக்கு அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களும் கல்விப்புலப் பணிப்பாளர்களின் சிறப்பான முன்னெடுப்புக்களுமே காரணம் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் நேற்று முன்தினம் (6) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;...

கல்வியமைச்சு உயர்தரப் பரீட்சையினை மேற்கோளாக வைத்து மேற்கொண்ட பகுப்பாய்வில் கிழக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்திலிருந்து முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இது மிகவும் சந்தோசமான செய்தியாகும்.

கடந்த இரண்டு வருடங்களில் கொரோனா மற்றும் பொருளாதார ஸ்திரமற்ற நிலைகளால் மாணவர்களின் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் கிழக்கு மாகாண ஆளுநர், கல்வியமைச்சின் செயலாளர், மாகாணப் பணிப்பாளர் ஆகியோரின் முறையான செயற்பாடுகளினால் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தொடரான மாணவர் கல்விச் செயற்பாட்டில் இவர்கள் குறியாக இருந்து செயற்பட்டனர்.

கல்விப் பணிப்பாளர்களுக்கான அறிவுறுத்தல்களின் அடிப்படையில் பாடசாலை அதிபர்களின் முறையான கண்காணிப்பு அறிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலங்களிலும் மாற்றீட்டுச் செயற்பாடுகள் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டன.அகில இலங்கையில் உயிரியல் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவன் தமிழ் வண்ணன் துவாரகேஷின் பங்களிப்பு இக் காலப்பகுதியில் குறிப்பிடக்கூடியது. அவரது வரலாற்றுச் சாதனை மாகாணத்தின் கல்விப்புலத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் அகமகிழ வைக்கிறது. பாடசாலைக் கல்வியினை முழுமையாக பின் தொடர்ந்தமையே தமது இலக்குக்கான வெற்றியென அம் மாணவன் தெரிவித்த கருத்துக்களும் இவ்விடத்தில் குறிப்பிட்டுக் காட்டக் கூடியதே.

கிழக்கு மாகாணத்திலிருந்து 17 ஆயிரத்து 25 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அதில் 11 ஆயிரத்து 237 பேர் பல்கலைக்கழக நுழைவினைப் பெற்றுள்ளதுடன் 472 பேர் 3 ஏ சித்திகளைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர் என்றார்.

# அட்டாளைச்சேனையில் விபத்து: இரு பெண்கள் வைத்தியசாலையில்

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**



கல்முனை அக்கரைப்பற்று வீதியில், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமுற்ற நிலையில் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுக் காலை அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு முன்பாக இரண்டு பெண் அரச உத்தியோகத்தர்கள் வீதியை கடக்க முற்பட்டபோது அக்கரைப்பற்றை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு இருவரும் காயமுற்ற நிலையில் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சீன மக்கள் குடியரசினால் கிழக்கு பல்கலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



சீன மக்கள் குடியரசின் ஊடாக கிழக்கு மாகாணத்தில் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் அதன் முதற்கட்டமாக கல்வி சார்ந்த வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கும் வண்ணம் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (06) இலங்கைக்கான சீன தூதுவரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் அனைத்து பீடங்களையும் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 150 மாணவர்களுக்கு முதற் கட்டமாக மாதாந்தம் 4000/= வீதம் ஏழு மாதங்களுக்கான அன்பளிப்பு தொகையான 4.3 மில்லியன் ரூபாய் நிதி சீன தூதுவரினால் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கான புலமைப்பரிசில் அன்பளிப்பு தொகையும் சீன தூதுவர் உள்ளிட்ட அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு அறிவியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

# நகர்வலம்



# உள்ளூராட்சி சபைகளின் வரி வருமானம் பிரதேச அபிவிருத்திக்கே பயன்பட வேண்டும்

## ஜனாதிபதிக்கு அமைச்சர் பிரசன்ன முன்வைத்த ஆலோசனை



உள்ளூராட்சி சபையினால் சேகரிக்கப்படும் வரிப்பணத்தைப் பயன்படுத்தி அந்தப் பிரதேசங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த அந்த சபைகளுக்கே சந்தர்ப்பம் வழங்குமாறு நகர மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆளுங் கட்சிக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார். நிதியமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையினால் உள்ளூராட்சி மன்றங்கள் தமது வரிப்பணத்தில் தமது பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இது தொடர்பில் பல உள்ளூராட்சி மன்றங்கள் தம்மிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், அந்த கோரிக்கைகளுக்கு அமையவே இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அனுமதி வழங்கினால் உள்ளூராட்சி மன்றங்கள் தமது பிரதேசங்களின் அபிவிருத்திக்காக திறைசேரியிலிருந்து பணத்திற்காக காத்திருக்க வேண்டியதில்லை எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

இதனிடையே அபிவிருத்தித் திட்டப் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளவைகளை விரைவில் முடிக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் துரித கதியில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாகப் புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், எனினும் அந்த திட்டங்களை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மெக்ஸிக்கோ பல்கலைக்கழகத்தில் சுவாமி விவேகானந்தர் உருவச்சிலை

## இந்திய மக்களவை சபாநாயகரால் அங்குரார்ப்பணம்



லத்தீன் அமெரிக்காவின் மெக்ஸிக்கோவிலுள்ள நகரொன்றில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலையை இந்திய மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா கடந்த சனிக்கிழமையன்று அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் மெக்ஸிக்கோவுக்கு விஜயம் செய்திருந்தது. அவ்விஜயத்தின் போதே சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலை அங்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மெக்ஸிக்கோவின் ஹிடல்கோ மாநிலத்திலுள்ள ஓடோனொமோஸ் பல்கலைக்கழகத்தில் இந்த உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அந்நிகழ்வில் உரையாற்றிய இந்திய மக்களவை சபாநாயகர், சுவாமி விவேகானந்தரின் வாழ்வின் சிறப்புகள் குறித்து சுட்டிக் காட்டினார்.

சுவாமி விவேகானந்தரின் போதனைகளும், ஆளுமையும் இந்திய மக்களை மாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் வாழ்கின்ற மக்களையும் பெரிதும் ஈர்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

1893 ஆம் ஆண்டில் சிக்காகோ நகரில் நடைபெற்ற உலக பாராளுமன்ற மதங்களுக்கான மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரையின் போது, இந்திய கலாசாரத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறியதையும் ஓம் பிர்லா அங்கு குறிப்பிட்டார்.

# நேத்ரா டீவியில் சாளரம் நிகழ்ச்சி

எதிர்வரும் சனிக்கிழமை (10) காலை 8.30 - 10.00 மணி வரை நேத்ரா டிவியில் ஒளிபரப்பாகவுள்ள 'சாளரம்' நிகழ்ச்சியில் கவிஞர் ஈழகணேஷ், ஊடகவியலாளர் நௌஷாட் மொஹிடீன், அறிவிப்பாளர் எஸ். எம். உவைஸ் ஷெரீப் ஆகியோரின் நேர்காணல்கள் இடம்பெறவுள்ளன. யசோதா கேதீசன் நேர்காணல் செய்யும் நிகழ்ச்சியை ஏ. எல்.ஜாபிர் தயாரித்தளிக்கிறார்.

# கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் பயணிகள் மற்றும் மீனவர்கள் பாதிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் மதுரங்குளி 10 ம் கட்டை பாலத்திற்கு கீழ் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அந்தப் பகுதி ஊடாக போக்குவரத்து செய்யும் பயணிகளும், சிறுகடல் மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

கணமூலை 10 ஆம் கட்டை வீதியில் உள்ள சிறுகடலை ஊடறுத்து கட்டப்பட்டுள்ள பெரிய பாலத்திற்கு கீழேயும், அருகிலும் இவ்வாறு கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பாலத்திற்கு கீழ் பகுதியில் சிறுகடல் தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருவதுடன், அவ்வீதியூடாக நாளாந்தம் நூற்றுக்கணக்கானோர் பயணிப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில், மேற்படி பாலத்திற்கு கீழும், அருகேயும் வீட்டுக் கழிவுப் பொருட்கள், கண்ணாடித் துண்டுகள் மற்றும் ஆடு, மாடுகளின் தோல்கள், எலும்புகள் உள்ளிட்ட பல கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் அந்த பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர்.

அத்துடன், மிருகங்களின் கழிவுப் பொருட்களையும், எலும்புகளையும் இந்தப் பகுதியில் கொட்டுவதால் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் சிறுகடல் மீனவர்களின் வலைகள் சேதமடைந்து காணப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான கழிவுப் பொருட்களை இந்தப் பகுதியில் கொட்டுவதால் இந்தப் பிரதேசம் மற்றும் சூழலுக்கும் இது பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் புத்தளம் பிரதேச சபை மற்றும் முந்தல் பிரதேச சுகாதார அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என மக்களும், மீனவர்களும் கூட்டாக கோரிக்கை விடுக்கின்றனர்.

# நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா



பேருவளை சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியின் 2022ம் வருடத்திற்கான வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் ஜனாபா பஹீமா பாயிஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சா/த, உ/த பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகள் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவிகள் இதன்போது பரிசு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் களுத்துறை வலய கல்விப்பணிப்பாளர் திரு. ஏ.யூ. விக்கிரமாராச்சி பிரதம அதிதியாகவும் வலய உதவி கல்விப்பணிப்பாளர் திரு. எம்.என்.எச்.டி.பி. டீ சில்வா கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிப்பார்.

விழாவின் விசேட அதிதிகளாக தமிழ் பிரிவிற்கான உதவி கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். ஜெயகுமார், பேருவளை பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. எம்.ஏ.ஜே.யூ. சோமரட்ன மற்றும் வலய தமிழ் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் எம். ஐ.எம். இல்யாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளதோடு நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், உட்பட முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தில்

# தொழுநோய் பரவும் அபாயம் அதிகரிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வடமத்திய மாகாணத்தில் தொழு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலக சிரேஷ்ட வைத்திய அதிகாரி ஹேமா வீரகோன் தெரிவித்தார்.

இலங்கையில் வருடாந்தம் சுமார் 2000 தொழுநோயாளர்கள் பதிவாகுவதாகவும் மேல் மாகாணத்தில் இந்நோய் அதிகமாக பரவுவதாகவும் வடமத்திய மாகாணத்தில் 10 வீதமானோருக்கு இந்நோய் பரவியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி வடமத்திய மாகாணத்தில் வயது 30 - 50 வயதிற்குட்பட்டவர்களுக்கு தொழுநோய் ஏற்பட்டுள்ளதுடன் அதில் 20 வீதம் விவசாயத்தில் ஈடுபட்டு வருபவர்களுக்கும் 15 வீதம் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விவாகப்பதிவாளர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

**ருஸைக் பாரூக்**

அகில இலங்கை முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் வெகுவிரைவில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் 2023/2025 வருடத்திற்கான புதிய நிர்வாக சபையொன்று தெரிவுச்செய்யப்படவுள்ளதால் நாடளாவிய ரீதியில் பதிவாளர் சேவையில் தற்போது கடமைபுரியும் அனைத்து முஸ்லிம் விவாகப் பதிவாளர்களும் தத்தமது பெயர், விலாசம், தொகுதி மற்றும் பிரத்தியேக தொலைபேசி இலக்கங்களை கீழ் காணும் தொடர்ப்பிலக்கத்திற்கு வட்ஸப் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளனர்.

கதீப் எம்.ஜே.எம். ரியால், பொதுச் செயலாளர், அகில இலங்கை முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள் சங்கம். தொலைபேசி இல. 0773447211 தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# படைவீரர்கள் ஞாபகார்த்த தினம் அனுஷ்டிப்பு



தாய் நாட்டுக்காக வேண்டி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு உயிர் நீத்த படை வீரர்களை நினைவு கூருமுகமாக ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் 01 ஆம் திகதி இடம்பெறும் படைவீரர்கள் ஞாபகார்த்த தினத்தினை முன்னிட்டு ஒழுங்குசெய்யப்பட்டிருந்த நிகழ்வுகள் அநுராதபுரம் விசேட அதிரடிப்படை முகாமில் நடைபெற்றது. இதன்போது அமைக்கப்பட்டுள்ள படைவீரர்கள் நினைவுத்தூபிக்கு அருகில் வடமத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜீ.ஏ.என்.எல். விஜேசேன மற்றும் வவுனியா, யாழ்ப்பாணம் வலய கட்டளை தளபதிகள் மரியாதை செலுத்துவதையும் விசேட அணிவகுப்பு மரியாதை நிகழ்வுகளும் நடைபெற்றபோது எடுத்த படம்.

படங்கள்; அநுராதபுரம் தினகரன் நிருபர்

# நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஏற்பாட்டில் 5ஆம் தர மாணவர்களுக்கு இலவச கல்விக்கருத்தரங்கு





**பேருவளை விசேட நிருபர்**

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஏற்பாட்டில் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள தர்கா நகர் ஸாஹிரா ஆரம்ப பாடசாலை, அல் ஹம்ரா மகா வித்தியாலயம் மற்றும் அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு (03) நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டதோடு வளவாளராக அநுராதபுரம் ஸாஹிரா தேசிய பாடசாலை ஆசிரியர் முஹம்மத் ரனீஸ் கலந்து கொண்டார்.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றி ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் 3 பாடசாலைகளைச் சேர்ந்த 3 மாணவர்களுக்கு ஸ்தாபகரினால் பெறுமதிவாய்ந்த பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான ஏ.ஜே.எம். அக்பர், ஏ.எம்.எம். லியாஸ், களுத்துறை மாவட்ட இளம் எழுத்தாளர் சங்க செயலாளரும் சமூக சேவையாளருமான எம். பாஸி சுபைர் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் தரம் 5 பொறுப்பாசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பெலியத்தையிலிருந்து கொழும்புக்கு

# மேலதிக ரயில் சேவையொன்றை சேவையில் ஈடுபடுத்துமாறு கோரிக்கை

**வெலிகம தினகரன் நிருபர்**

பெலியத்தையிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் காலை நேர புகையிரத சேவைக்கு மேலதிகமாக இன்னுமொரு ரயில் சேவையை நடைமுறைப்படுத்துமாறு புகையிரத திணைக்களத்திற்கு பயணிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

தற்போது பஸ் வண்டிகளில் பயணச் சீட்டுகளின் விலை அதிகரித்துள்ளதால் பெரும்பாலானோர் புகையிரத வண்டிகளிலேயே பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக காலைவேளைகளில் கொழும்புக்குச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

காலையில் பெலியத்தையிலிருந்து புறப்படும் றுகுணுகுமாரி, காலுகுமாரி ரயில் வண்டிகளையடுத்து முற்பகல் 10.00 மணிக்கே மற்றைய ரயில் வண்டியொன்று கொழும்புக்குப் புறப்படுகின்றது. எனவே இதற்கு இடையில் ஒரு ரயில் வண்டிச் சேவையை ஈடுபடுத்துமாறு பயணிகள் வேண்டிக் கொள்கின்றனர். சனநெரிசலைத் தவிர்த்துக் கொள்ளவே இவ்வாறு மேலதிக சேவையொன்றை ஈடுபடுத்துமாறும் பயணிகள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# ஆறுக்கு மேற்பட்ட யானைகள் உயிரிழப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

மனித செயற்பாடுகள் காரணமாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மாத்திரம் வனஜீவராசிகள் திணைக்கள அநுராதபுரம் வலயத்தில் ஆறுக்கு மேற்பட்ட காட்டுயானைகள் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் அலுவலக உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மிஹிந்தலை பொலிஸ் பிரிவின் புதுக்குளம் மற்றும் கெப்பித்திகொள்ளாவ, கெக்கிராவ கலாவெவ, கெக்கிராவ மரதன்கடவள பகுதியிலேயே இச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். சட்டவிரோத மின் கம்பிகளில் சிக்கி நான்கு யானைகளும் துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் இரண்டுக்கு மேற்பட்ட யானைகளும் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

# 2047 சுதந்திர நூற்றாண்டில் இந்தியா வளர்ந்த பொருளாதார நாடாகத் திகழும்


## நிர்மலா சீதாராமன் பெருமிதம்



இந்தியா தன் நூறாவது சுதந்திர ஆண்டை 2047இல் கொண்டாடும் போது முன்னேறிய பொருளாதார நாடாக விளங்கும் எனவும் இதற்கான பொருளாதார பாதையை இந்திய ரிசார்வ் வங்கியும் நிதியமைச்சும் வகுக்கவுள்ளது என்றும் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்திய பொருளாதார வளர்ச்சிக்கான தொடர் ஊக்குவிப்பு முயற்சிகள் அடுத்த 25 வருடங்களாக இடையறாததாக மேற்கொள்ளப்படும் என்றும் அதற்கான பாதை வகுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்திருக்கும் பாரத நிதியமைச்சர், மக்களை கைபிடித்து வழிகாட்டும் ஒரு பொருளாதார நடைமுறையையே கை கொள்ள வேண்டுமே தவிர 'வழங்கப்பட்டாக வேண்டும்' என்ற எதிர்பார்ப்பு அடிப்படையில் அல்ல என்று இவ் வளர்ச்சித் திட்டம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மக்களுக்கு எவை அவசியமோ அவற்றை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படுமானால் அவர்களாகவே சுய கௌரவத்துடன் வாழ்க்கையில் எழுந்து நிற்கக் கூடியதாக இருக்கும். உலகப் பொருளாதார உலகில் சீனாவின் பிரவேசம் மாறுதல்களை உருவாக்கி இருக்கிறது.

## வறுமை காரணமாக நடைபாதை வியாபாரத்தில் ஆப்கான் பெண்கள்



காபூல் தெருக்களில் சமீப காலமாக அதிக பெண்கள் பல்வேறு பொருட்களை நடைபாதை வியாபாரத்தில் விற்று வருவதாகவும் இவர்களில் பலர் கணவரற்ற குடும்பத் தலைவியாக காணப்படுவதாகவும் ஊடக தகவல்கள் தெரிவித்துள்ளன.

குடும்ப வருமானம் இல்லாததால் கடினமான வேலைகளைச் செய்வதற்கு இப் பெண்கள் முன்வருவதாக இத் தகவல்களில் இருந்து அறிய முடிகிறது. இவ்வாறு தெருவுக்கு வந்துள்ள பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது இன்றும் சரியாகக் கணக்கிடப்படவில்லை என்று இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள ஆப்கான், தொழில் மற்றும் சமூக விவகாரங்களுக்கான அமைச்சு, இவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்களை வகுத்து வருவதாக தெரிவித்துள்ளது.

பாதுகாவலர்களையோ, கணவர்மாரையோ இழந்த பெண்களே வீதிக்கு வருவதாக தெரிவித்திருக்கும் பிரதி தொழில் அமைச்சர் அப்துல் சதாத், இஸ்லாமிய ஷரியா சட்டத்தின் கீழ் அவர்களின் வீடுகளிலேயே தொழில் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனக் கூறியுள்ளார்.

ஆப்கானில் அரைவாசிக்கும் அதிகமான பொதுமக்கள் வறுமையில் வாடுவதையும் உண்ணப் போதுமான உணவு கிடைப்பதில்லை என்றும் ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கலைஞர் கலைக்கமலின் 'கீத்ராத் - 56', '4 IN ONE' திரை இசை நிகழ்ச்சி



ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் 56வது 'கீத்ராத்' மாபெரும் இசை நிகழ்ச்சி நாளை (09) மாலை 7 மணிக்கு கொழும்பு 07 ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் தினகரன் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது.



கலைப் புரவலர் தேசமான்ய ஸைட் சிவாஜி மௌலானா பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இந் நிகழ்வில் தெஹிவளை மாநகரசபை உறுப்பினர் முஸ்தபா ஷெரீனா, தேசமான்ய கௌசலா தேவி கோவிந்தப்பிள்ளை இரு பெண்மணிகள் முதல் முறையாக முன்னிலை வகிக்கவுள்ளனர்.

சிறப்பு அதிதிகளாக முருகேசு செந்தில்நாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சபீக் ரஜாப்தீன், பிரபல சட்டத்தரணி ருஷ்தி ஹபீப், கலாநிதி யூசுப் மரைக்கார், கௌரவ அதிதிகளாக கவிமணி நஜ்முல் ஹுசைன் தம்பதிகள், கவிஞர் ரவூப் ஹஸீர் தம்பதிகள், செல்லமுத்து ரவீந்திரன் தம்பதிகள், வானொலி 'பாரம்பரியம்' புகழ் எம்.எஸ்.எம்.ஜின்னா தம்பதிகள், சமூக சேவையாளர்கள் சண்முகம் திருச்செல்வம், ரமீஸ் ஹாஜி ஆகியோர் கலந் துகொள்ளவுள்ளனர்.

பத்மஶ்ரீ டி.எம்.சௌந்தரராஜன், இசைமுரசு நாகூர் ஹனீபா, ஹிந்தி இசைத் திலகம் முஹம்மது ராபி, எஸ்.பி. பாலசுப்ரமணியம் பாடல்களை கலைக்கமல், பாடகி மொறீன் ஜெனற்றுடன் இணைந்து பாடவுள்ளார். இசையமைப்பாளர்கள் செந்தூரன், அமீர் கான், அயாஸ் சவாஹிர், தாளக் கலைஞர்கள் கண்ணா மொஹமட் ஸியாட் இசைவழங்கவுள்ளனர். கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 'கீத்ராத்' இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

## பொது அறிவித்தல்

2007, 07ஆம் இல கம்பனிச்சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் "KIDCARE HOME AND RESIDENT SCHOOL TRUST" எனும் நாமம் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது "LION GRAETIAN GUNAWARDHANA KIDCARE TRUST" அதற்குரிய சான்றிதழ் 2022 ஆவணி 26 ஆம் திகதி கூட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் பதியப்பட்டுள்ளது.

கம்பனியின் முன்னைய பெயர் : **KIDCARE HOME AND RESIDENT SCHOOL TRUST**

கம்பனியின் இலக்கம் : **G A 52**

பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :

**இல. 9, ரம்யா ரோட், கொழும்பு - 04**

கம்பனியின் தற்போதைய பெயர் : **LION GRAETIAN GUNAWARDHANA KIDCARE TRUST**

**நிறுவனத்தின் முகாமையாளர்**
**கோ - சேர்வ் (பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனி செக்கட்ரிஸ்**

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் கல்பிஹில்ல அரச தோட்டத்தில் அபாயகரமான 16 பலா மரங்களை விற்பனை செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

மேற்படி பலா மரங்களின் கேள்விக்கான நிபந்தனைகள் மற்றும் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் உள்ளடங்கலான கேள்வி ஆவணங்களை 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 2022-09-08ஆம் திகதி முதல் 2022-09-22ஆம் திகதி வரையிலும் அல்லது கல்பிஹில்ல தோட்டத்தில் அமைந்துள்ள பிரதேச அலுவலகத்தில் 2022-09-09ஆம் திகதி முதல் 2022-09-21ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையும் கொள்வனவு செய்யலாம் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை அரச பெருந்தோட்டக் கூட்டத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-09-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் உள்ளிடல் வேண்டும் என்பதுடன் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது கேள்வியின் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் மற்றும் நிராகரிக்கும் முழுமையான அதிகாரத்தை இஅபெ கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீரானியா வீதி, கொழும்பு - 12.**
**2022-09-06ஆம் திகதி.**

**விசாரணைகள்: 0115-921463**

## விலைமனு அறிவித்தல்

### கண்டி மாநகர சபை

தன்னியக்கி பணம் செலுத்தும் இயந்திரமொன்றின் மூலம் கண்டி மாநகர சபையின் கட்டணப் பட்டியல்களை செலுத்துவதற்காக நுகர்வோர்களிற்கு வசதிகளை ஏற்படுத்துவதற்காக கீழ்க்காணப்படும் தகைமைகளைப் பூரணப்படுத்தும் விலைமனுதாரர்களிடமிருந்து 2022.10.04 அன்று மு.ப. 10.00 வரை முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2022.10.04 அன்று மு.ப. 10.00 இற்கு கண்டி மாநகர சபையின் மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விகள் இரண்டு பிரதிகளாக தனித்தனி உறைகளில் உள்ளிட்டு விலைமனு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென உரித்தான கேள்விகளில் பெயர் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகக் கண்டி மாநகர சபையின் நிதிப்பிரிவின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | கேள்வி | தகைமைகள் | VAT பெசேவ உடன் கேள்விப் படிவக் கட்டணம் | விலை மனுப் பிணைத் தொகை ரூபா | விலைமனுக் காப்புறுதி |
|---|---|---|---|---|---|
| 01 | தன்னியக்கி பணம் செலுத்தும் இயந்திரமொன்றின் மூலம் கண்டி மாநகர சபையின் கட்டணப் பட்டியல்களைச் செலுத்துவதற்காக நுகர்வோருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் | குறைந்தபட்சம் கடந்த (05) ஐந்தாண்டுகளில் நிகரான கொள்ளளவுள்ள தன்னியக்கி பணம் செலுத்தும் இயந்திரங்கள் குறைந்தபட்சம் 25 ஆவது இலங்கையில் நிறுவுதல் மற்றும் பராமரித்தல்களிற்காக கேள்வி கோரல் மேற்கொண்ட நபர்களிற்கு அல்லது அங்கத்தவர்களிற்கு அனுபவம் இருத்தல் வேண்டும். | 3,500.00 | 75,000.00 | சமர்ப்பிக்கப்படும் விலைமனுத் தொகையின் 10% இற்கான செயற்பாட்டு காப்புறுதி ஒன்று |

கண்டி மாநகர சபையின் கணக்காளர் (வழங்கல்) பிரிவில் 2022.09.07 முதல் 2022.10.03 அன்று மு.ப. 09.00 முதல் பி.ப. 02.45 வரை மாத்திரம் இதற்கான கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் கணக்காளர் வழங்கல் (தொலைபேசி இலக்கம் 081-2232071/ 071-2994859) மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு மாதிரிப்படிவங்களைப் பெற்றுக் கொண்டு, அதற்காக விண்ணப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரர்களினதும் மற்றும் கேள்விகளைப் பெற்றுக்கொண்டு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடத்தவறும் விலைமனுதாரர்களினதும் வைப்புத் தொகையானது, சபைக்கு உரித்தாக்கப்படும். எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சபைக்கு உரித்தாகும்.

**கே.கே.ஜீ.ஐ.டீ.பி. விஜேதிலக**
**மாநகர ஆணையாளர்,**
**கண்டி மாநகர சபை.**
**2022.08.06**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### ஊவா மாகாண சபை
### உள்ளூராட்சித் திணைக்களம்
### உள்ளூராட்சியின் கொள்ளளவு அபிவிருத்தி (CDLG) திட்டம்
### ஊவா மாகாணம்

1. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணங்களுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

| நிர்மாணத்தின் பெயர் | தேவையான CIDA தரம் | ஒப்பந்தக் காலம் | விலைக் கோரல் விலை மனுக்களின் | | மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| | | | பிணை முறித் தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் | |
| கணனி ஆய்வுகூடத்தின் நிர்மாணம் | C6 மற்றும் C5 கட்டிடம் | 4 மாதங்கள் | 189,000.00 | 2023 ஜனவரி 12 | 5,000.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும். எவ்வாறாயினும் ஊவா மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்து கொண்டவர்களுக்காக வரையறுக்கப்பட்டுள்ளது.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கத் தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தரத்திற்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைக்கோரல்கள் ''1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் இல. 03" இன் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. ஆகையால், இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவு சான்றிதழை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் சமர்ப்பிக்கத் தவறினால் அது விலைமனு நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம்.
5. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையில் 4ஆம் பிரிவில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. மேலதிக தகவல்கள் 5ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பதுளை, மார்டின் சில்வா மாவத்தை, ஊவா - உள்ளூராட்சித் திணைக்களம், உள்ளூராட்சி ஆணையாளர் - ஊவா அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 0552222363, தொலைநகல்: 0552222055, மின்னஞ்சல்: clguva@gmail.com) மற்றும் எந்தவொரு வேலை நாளிலும் 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 செப்டெம்பர் 08ஆம் திகதி முதல் 2022 செப்டெம்பர் 28ஆம் திகதி வரை 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியும் பதுளை, மார்டின் சில்வா மாவத்தை, ஊவா - உள்ளூராட்சித் திணைக்களம், உள்ளூராட்சி ஆணையாளர் - ஊவா அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் கடிதமொன்றையும் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.
8. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை தலைவர், உள்ளூராட்சி ஆணையாளர் - ஊவா, உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்டின் சில்வா மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு 2022 செப்டெம்பர் 29ஆம் திகதி 14.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்பதாக ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
10. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா,**
**மார்டின் சில்வா மாவத்தை, பதுளை**
**தொலைபேசி இல. 0552222363/0552222407**
**2022 செப்டெம்பர் 08ஆம் திகதி.**

### வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சு

## தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களத்தின் விற்பனை நிலையங்களை ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுதல் – 2022/2023

தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களத்திற்குரித்தான நிறுவனத்திற்குள் உள்ள விற்பனை நிலையங்களை ஒரு வருட காலத்திற்கு (2022/2023) நடாத்திச் செல்வதற்காக ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022 செப்டெம்பர் 08ஆம் திகதி முதல் 2022 செப்டெம்பர் 28ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அட்டவணை-1**

| இலக்கம் | விற்பனை நிலையங்களின் விபரம் | விலைமனுப் பிணை முறி ரூபா |
|---|---|---|
| 1 | ஞாபகார்த்த விற்பனை நிலையம் - பின்னவல யானைகள் சரணாலயம் | 5,000.00 |
| 2 | நடமாடும் விற்பனை நிலையம் - பின்னவல யானைகள் சரணாலயம் | 5,000.00 |
| 3 | முவ அரண அருகிலுள்ள விற்பனை நிலையம் - பின்னவல யானைகள் சரணாலயம் | 5,000.00 |
| 4 | புகைப்பட நிலையம் - தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை | 5,000.00 |
| 5 | குருவிகள் பூங்காவிற்கு அண்மையிலுள்ள உணவு விற்பனை நிலையம் - தெஹிவளை தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை | 5,000.00 |
| 6 | யானை சாகச திடல் 02 அண்மையிலுள்ள உணவு விற்பனை நிலையம் - தெஹிவளை தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை | 5,000.00 |
| 7 | யானை மடுவத்திற்கு அருகிலுள்ள (புதிய) உணவு விற்பனை நிலையம் - தெஹிவளை தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை | 5,000.00 |
| 8 | கெண்டி பிளோஸ் இயந்திரம் 02 - தெஹிவளை தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை | |
| 9 | ஞாபகார்த்த விற்பனை நிலையம் இல. 01 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5,000.00 |
| 10 | ஞாபகார்த்த விற்பனை நிலையம் இல. 02 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5,000.00 |
| 11 | ஞாபகார்த்த விற்பனை நிலையம் இல. 03 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5,000.00 |
| 12 | ஞாபகார்த்த விற்பனை நிலையம் இல. 04 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5,000.00 |
| 13 | உணவு விற்பனை நிலையம் இல. 01 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5,000.00 |
| 14 | உணவு விற்பனை நிலையம் இல. 02 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 5,000.00 |
| 15 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 01 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 16 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 02 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 17 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 03 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 18 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 04 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 19 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 05 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 20 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 06 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 21 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 07 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 22 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 08 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 23 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 09 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 24 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 10 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 25 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 11 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |
| 26 | கிராமிய உற்பத்தி விற்பனை நிலையம் இல. 12 - ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 2,500.00 |

2. இந்த விலைகூறல்கள் தேசிய மட்ட போட்டி கேள்வி (NCB) கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. கேள்விதாரர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் பின்வருமாறாகும் என்பதுடன் தகைமைகளை உறுதி செய்யும் ஆவணங்களை கேள்விகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - வியாபாரப் பதிவுச் சான்றிதழ் (விற்பனை நிலையத்திற்கு இயைபான துறையிலாக இருத்தல் வேண்டும்)
4. கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்களை தெஹிவளை, அநகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் மிருகக்காட்சிச்சாலைத் திணைக்கள தலைமை அலுவலகத்தில் 2022 செப்டெம்பர் 08ஆம் திகதி முதல் 2022 செப்டெம்பர் 27ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். இதன் பொருட்டு எழுத்து மூல வேண்டுகோளொன்றுடன் ஒவ்வொரு விற்பனை நிலையத்திற்காகவும் வெவ்வேறாக 1000.00 ரூபாவை கேள்விப் படிவக் கட்டணமாக செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் மாதிரிகளை 02 பிரதிகளில் பூர்த்தி செய்து (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக) இரு உறைகளில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் திறக்கும் இடங்களில் இறப்பர் முத்திரைக் குறி பொறித்து, அரக்கு முத்திரைக்குறி பொறித்தல் கட்டாயமாகும். அவ்வாறே கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் விற்பனை நிலையங்களை ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குதல் - 2022/2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். மூலப் பிரதியை இட்டு அனுப்பும் கடித உறையின் முன்புறம் ''மூலப் பிரதி'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
6. கேள்விப் படிவங்களை ''தலைவர், பெறுகைக் குழு, தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம், அநகாரிக்க தர்மபால மாவத்தை, தெஹிவளை எனும் முகவரிக்கு 2022 செப்டெம்பர் 28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் நேரில் கொண்டு வந்து திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
7. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விச் சபையின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
8. ஒவ்வொரு விற்பனை நிலையத்தின் பொருட்டான கேள்வி ஆவணங்களுடன் 2ஆம் பக்கத்தில் 1ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணை முறியை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்று 2023 ஜனவரி 24ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறி அல்லது மேற்படி பெறுமதிக்குச் சமமான ரொக்கப் பணத்தை மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு பிணை முறிகள் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் கவனத்திற் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
9. பொருத்தமான கேள்விதாரரைத் தெரிவு செய்தல் தொடர்பில் முழுமையான உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் பொருட்டு எவ்வகையிலேனும் அழுத்தத்தைப் பிரயோகித்தல் தெரிவு செய்யப்படுவதற்கான தகைமையீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும். இந்த கேள்வி கோரல் அறிவித்தல் மற்றும் கேள்வி ஆவணங்களில் தெரிவிக்கப்படாத விடயங்கள் தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்வதற்கான முழுமையான உரிமையை தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார். இது தொடர்பிலான மேலதிக விபரங்கள் தேவையாயின் 0112710807 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் பிரதான கணக்காளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்,**
**அநகாரிக தர்மபால மாவத்தை,**
**தெஹிவளை.**

## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

**சிலாபம், வாழைச்சேனை மற்றும் ஹம்பந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மணல் விற்பனைக்கான மீண்டும் விலைமனுக்கோரல்**

**CFHC/PD/SAND/HAR/2022/10 (I- IX)**
**( Chilaw – VIII –II / Valachchenai – IX – I / Hambanthota – V- I )**

சிலாபம், வாழைச்சேனை மற்றும் ஹம்பந்தோட்டை மீன்பிடித் துறைமுகங்களில் 2022.09.22 திகதி மணல் அகழ்வு மற்றும் விற்பனைக்கான முத்திரையிடப்பட்ட விலைகள் மாலை 02.00 மணி முடியும் வரை அழைக்கப்படும். இது தொடர்பான அனைத்து விபரங்களையும் கூட்டுத்தாபனம் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (www.cfhc.gov.lk) இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.

## இலங்கை போசணை மருத்துவர்கள் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

(டாக்டர்) உபுல் கலப்பத்தி ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''இலங்கை போசணை மருத்துவர்கள் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூல மொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) அடிப்படைச் சிகிச்சை மற்றும் பிரயோக போசணையை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சை முறைக்கான கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிகளுக்காக ஊக்குவிப்பு, மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளல்

(ஆ) போசணைக்கான அடிப்படை, சிகிச்சை மற்றும் பிரயோகம் தொடர்பான விஞ்ஞான ரீதியான விவகாரங்களை சந்தித்து கலந்துரையாடுவதற்கானதோர் மன்றத்தினை ஏற்பாடு செய்தல்

(இ) போசணைத்துறை மற்றும் அதன் அபிவிருத்தி சம்பந்தமான இலக்கியங்கள் மற்றும் பத்திரிகைகளை அதன் உறுப்பினர்களுக்கு மத்தியில் அச்சிட்டு வெளியிடுதல் மற்றும் விநியோகித்தல்

பிறவும்.

**(டாக்டர்) உபுல் கலப்பத்தி**
**பாராளுமன்ற உறுப்பினர்**

# அறிவித்தல்

## கட்டானை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணைகளுக்கான குத்தகை விற்பனை – 2023

கட்டானை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணை கேள்விப் பத்திரங்கள் (2022.09.26)

2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26ம் திகதி முற்பகல் 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2022.07.22 திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**பிரியங்கா கொடிதுவக்கு**
**பிரதேச செயலாளர்**
**கட்டானை**

**கட்டானை பிரதேச செயலகம்**
**தெமங்ஹந்திய**
**2022.09.05**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண கல்வித் திணைக்களம் – வடமத்திய மாகாணம்

### நிதி வழங்குதல் - பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் திட்டம் (GEMP) - 2022 (உலக வங்கி)

இங்கு பின்வருமாறு காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | விலைமனுப் பிணை முறி (இல. ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபாயில்) | ஒப்பந்தக் காலம் - நாட்கள் | பதிவுத் தரம் |
|---|---|---|---|---|---|
| 01 | 40x20 புதிய வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் வமமா/அனு/தம்பு/தம்பு/மஹபெல்லக் ம.வி. | 73,000.00 | 2,500.00 | 105 நாட்கள் | C08 அல்லது அதற்கு மேல் |
| 02 | 40x20 புதிய வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் வமமா/அனு/கெகி/இப/ரணஜயபுர ம.வி. | 63,500.00 | 2,500.00 | 105 நாட்கள் | C08 அல்லது அதற்கு மேல் |
| 03 | 40x20 புதிய வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் வமமா/அனு/கலே/மிஹி/மிஹிந்தலை ம.வி. | 63,500.00 | 2,500.00 | 105 நாட்கள் | C08 அல்லது அதற்கு மேல் |
| 04 | 40x20 புதிய வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் வமமா/அனு/கெபி/ஹொ/கடவத் ரத்மலே மு.வி. | 63,500.00 | 2,500.00 | 105 நாட்கள் | C08 அல்லது அதற்கு மேல் |
| 05 | 40x20 புதிய வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் வமமா/பொ/பொ/த.க/சீவளி க.வி | 73,000.00 | 2,500.00 | 105 நாட்கள் | C08 அல்லது அதற்கு மேல் |
| 06 | 40x20 புதிய வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் வமமா/பொ/பொ/த.ட/கடவலவெவ ம.வி. | 73,000.00 | 2,500.00 | 105 நாட்கள் | C08 அல்லது அதற்கு மேல் |
| 07 | 40x20 புதிய வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் வமமா/பொ/ஹிகு/வெல/இரஹந்தகெடுவெவ ம.வி. | 63,500.00 | 2,500.00 | 105 நாட்கள் | C08 அல்லது அதற்கு மேல் |
| 08 | 40x20 புதிய வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் வமமா/பொ/திம்பு/அர/மெதகம ம.வி. | 73,000.00 | 2,500.00 | 105 நாட்கள் | C08 அல்லது அதற்கு மேல் |
| 09 | மாகாண கல்வி வள நிலையத்தை நவீனமயப்படுத்துதல், ஜயந்தி மாவத்தை, அனுராதபுரம் | 60,000.00 | 2,500.00 | 105 நாட்கள் | C08 அல்லது அதற்கு மேல் |

01) விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்கள் மூலமாக இடம்பெறும்.

02) விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் சகல விலைமனுதாரர்களும் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) செல்லுபடியாகும் பதிவைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உள்ளாகாதவர்களாக இருத்தல் வேண்டும்.

03) நிர்மாண ஒப்பந்தங்களுக்கு இயைபான சகல விலைமனு ஆவணங்களை அனுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளர் (நிதி) அவர்களிடம் (தொலைபேசி இலக்கம் 025-2222432 தொலைநகல் இலக்கம் 020-2222432 மற்றும் மின்னஞ்சல் முகவரி: ncpedpro@gmail.com) மற்றும் பொலன்னறுவை வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளரிடம் (தொலைபேசி: 027-2226982) அலுவலக நேரங்களில் 2022 செப்டெம்பர் 29ஆம் திகதி வரை (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையில்) பரீட்சித்துப் பார்க்கலாம்.

04) நிர்மாண ஒப்பந்தங்களுக்கு இயைபான சகல வேலை விபரங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பானவற்றை அனுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண பொறியியல் திணைக்களத்தின் கட்டிடப் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அந்த அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும் வசதிகள் கீழே தரப்பட்டுள்ளன. தொலைபேசி இலக்கம் 025-2225916 தொலைநகல் இலக்கம் 025-2226157 மற்றும் மின்னஞ்சல் முகவரி: ncpengineering@gmail.com

05) தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் அனுராதபுரம் வடமத்திய மாகாணத்தின் மாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்காளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மற்றும் பொலன்னறுவை வலய கல்வித் திணைக்களத்தின் கணக்காளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனுக்கள் 2022 செப்டெம்பர் 08ஆம் திகதி முதல் 2022 செப்டெம்பர் 29ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும்.

06) விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''இரண்டாம் பிரதி'' என வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டம் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர், இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என்பவற்றை உள்ளடக்கிய உறையை வேறொரு உறையில் இட்டு, தலைவர், பெறுகைக் குழு, மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம், அனுராதபுரம் எனும் முகவரிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும் அல்லது மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிதி) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

07) விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலம், தகைமை மற்றும் ஏனைய நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

08) விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனு முறியானது நிபந்தனையற்றதாகவும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாகவிருத்தல் வேண்டும். அல்லாவிட்டால் ரொக்கப் பணத்தில் செலுத்தலாம். விலைமனுப் பிணை முறியானது விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் இந்நாட்டில் மாற்றக்கூடியதாகவிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி நேரம் முடிவடைந்த உடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

09) கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்களில் ஒன்றை அல்லது அனைத்தையும் அல்லது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்தவொரு வேளையிலும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் அதன் காரணமாக விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு கடப்பாடு அல்லது பொறுப்பு இல்லையென்பதுடன் அவ்வாறான தீர்மானத்தை எடுப்பதற்கான காரணம் தொடர்பில் பிரகடனமொன்றை விடுப்பதற்கு கடப்பாடு இல்லை.

**தலைவர் / மாகாண கல்விப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அனுராபுரம்.**

**திகதி: 2022-09-08.**

# கேள்வி அறிவித்தல்

## வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலை

### மேல் மாகாண சுகாதார திணைக்களம்

## உணவகம் கேள்வி கோரல் – 2022/2023

2022/2023 ஆண்டு கால எல்லைக்காக வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் உணவக சேவையை நடத்திச் செல்வதற்கு, அவற்றில் தகைமைகள் உள்ள கேள்விதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இது பற்றி ஆர்வம் காட்டுகின்றவர்கள், கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 விண்ணப்பப்படிவக் கட்டணத்தை வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் கணக்காளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன், தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து, 2022.09.06 முதல் 2022.09.26 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரியிடம் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இங்கு காசு செலுத்தாமலேயே கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
2. மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு, அவ்உறைகளை தனி உறையில் இட்டு, சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் '2022/2023 ஆண்டிற்காக உணவக சேவையை வழங்குதல்' என்று குறிப்பிட்டு, 2022.09.27ம் திகதி மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, ஆதார வைத்தியசாலை, வத்துபிட்டிவல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரி உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
3. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ் இடத்திலேயே மு.ப. 10.01 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரருக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.
4. குறித்த கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**மருத்துவர் யூ.ஏ.ஏ. சம்பத் பெரேரா**
**தலைவர், பிரதேச பெறுகைக் குழு**
**ஆதார வைத்தியசாலை, வதுபிட்டிவல.**
**பொது தொலைபேசி - 033-2280261/ 262**
**2022.09.06**

## பொது அறிவித்தல்

2007, 07ஆம் இல கம்பனிச் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் "MERCANTILE SEAMEN TRAINING INSTITUTE LIMITED" எனும் நாமம் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது "M S T I MARITIME ACADEMY LIMITED" அதற்குரிய சான்றிதழ் 2022 ஆவணி 26 ஆம் திகதி கூட்டு இணைக்கப்பட்டுள்ளது. என்பதை இவ்வறிவித்தல் மூலம் பதியப்பட்டுள்ளது.

கம்பனியின் முன்னய பெயர்: **MERCANTILE SEAMEN TRAINING INSTITUTE LIMITED**

கம்பனியின் இலக்கம் : **P B 3639**

பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : **மில்லெனியம் டிறைவ், ஐ ரி பார்க், மாலபே.**

கம்பனியின் தற்போதைய பெயர் : **MSTI MARITIME ACADEMY LIMITED**

**நிறுவனத்தின் முகாமையாளர்**
**கோ - சேர்வ் (பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனி செக்கட்ரிஸ்**

## பொது அறிவித்தல்

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(5) ற்கமைய, "M S T I MARITIME ACADEMY LIMITED" எனும் கம்பனியான நிலைமை 2022 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 01ம் திகதி நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட தீர்மானத்தின்படி, "M S T I MARITIME ACADEMY (PRIVATE) LIMITED" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

முன்னைய பெயர் : M S T I MARITIME ACADEMY LIMITED
கம்பனியின் தற்போதைய இல. : PB 3639
பதிவு செய்யப்பட்டுள்ள காரியாலய முகவரி : **மில்லெனியம் டிறைவ், ஐரி பார்க், மாலபே.**
கம்பனியின் புதிய பெயர் : M S T I MARITIME ACADEMY (PRIVATE) LIMITED

**நிறுவனத்தின் முகாமையாளர்**
**கோ - சேர்வ் (பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனி செக்கட்ரிஸ்**

### பெருந்தோட்ட அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

### தேயிலைக் கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரல்

**SLSPC/PL/Tea Plant/T-172/2022**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குரித்தான கண்டி, மாத்தளை மற்றும் ஹப்புத்தளை வலயங்களில் அமைந்துள்ள தோட்டங்களில் மீள் தேயிலைப் பயிர்ச்செய்கைக்காக தேயிலைக் கன்றுகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்குநர்களிடமிருந்து பின்வரும் விபரக்குறிப்புகளுக்கமைய முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- இயைபுடைய வலயத்திற்கு தகுதியான தேயிலை வகையாகவிருத்தல் வேண்டும்.
- 08 - 10 மாதங்களுக்கிடையிலான கன்றுகளாகவிருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்ச படி எண்ணிக்கை 12 - 18 இடையில் இருத்தல் வேண்டும்.
- முறையாக தொற்றுநீக்கப்பட்ட மண் பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- நோய்கள் அற்றதாகவிருத்தல் வேண்டும்.

இதன் பிரகாரம் மேற்படி விபரக்குறிப்புகளின் பிரகாரம் பின்வரும் மாதிரிக்கு அமைய தேயிலைக் கன்றுகளுக்கான போக்குவரத்துக் கட்டணத்துடன் ஒவ்வொரு தோட்டத்திற்காகவும் வெவ்வேறான முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2022-09-22ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்' ''தேயிலைக் கன்றுகள் வழங்குதல்'' எனக் குறிப்பிட்டு ''தலைவர், பெறுகைக் குழு, இல. 21, மீராணியா வீதி, கொழும்பு-12'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

| தோட்டம் / பிரதேசம் | தேவையான கன்றுகளின் எண்ணிக்கை | தேயிலைக் கன்றின் விலை (ரூபா) | போக்குவரத்துக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| அலகொல - மடுல்கலை | 127,500 | | |
| கொட்டகங்க - ரங்கல | 236,050 | | |
| கோமர - தவலன்தென்ன | 20,100 | | |
| ஹாகல - தவலன்தென்ன | 24,000 | | |
| ஹுன்னஸ்கிரிய - எல்கடுவ | 55,000 | | |
| கெலேபொக்க - மடுல்கலை | 328,450 | | |
| மிட்லண்ட் - ரத்தொட்ட | 135,000 | | |
| ரங்கல - ரங்கல | 127,500 | | |
| கெவதலாவ - மெதமஹநுவர | 55,000 | | |
| வுட்சைட் - மெதமஹநுவர | 38,500 | | |
| விகாரகல - ஹல்துமுல்ல | 12,500 | | |
| கன்றுகளின் மொத்த எண்ணிக்கை | 1,159,600 | | |

2022-09-22ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு கேள்விகள் திறக்கும் குழுவின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். அதேபோல் நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்திற்குக் கிடைக்கப்பெறாத விலைமனுக்கள் தொடர்பில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் பொறுப்புக்கூறாது. மேலும் நீங்கள் இறக்குமதி செய்வதற்காக அரச வரிகள் இயைபுடையதாகவிருந்தால் அவைகளை விலைமனுப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

எந்தவொரு விலைமனுவையும் அல்லது விலைக்கோரலின் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் மற்றும் நிராகரிக்கும் முழுமையான அதிகாரத்தை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் அதுவே இறுதித் தீர்மானமாகும்.


**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீராணியா வீதி, கொழும்பு 12.**
**விசாரணைகள்: 0115-921463**
**2022-09-08ஆம் திகதி.**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**108 நிஸான் கார்** விற்பனைக்கு

WP FZ-0050 Nissan Sunny 2004, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 052302



**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

WP AAI-7032 TVS King 2013, Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 052305

WP Q Q -4 511Bajaj 2008 , Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 052303

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

குருணாகல் தபால் வெஹெர, நிஸ்ஸங்க மாவத்தை, இலக்கம் 6/11 இல் வசிக்கும் ரணதுங்க ஜயசேகர கோராலலாகே துலாரி ரங்கிகா ரணதுங்க (தே.அ.அ.இல. 818493266V) ஆகிய நான் இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பொன்றினைப் பெற்றுச் செல்ல முன்னர், திருமதி ஏ.ஜீ. பண்டார பிரசித்த நொத்தாரிசு என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 860, மற்றும் 2021.10.25 திகதியும் கொண்ட அற்றோணி தத்துவத்தின் பிரகாரம், என்னுடைய பிள்ளைகள் இருவரையும் பராமரிப்பதற்காக தற்காலிகமாக, குருணாகல் தபால் மாஸ்பொத்த, ஹங்பமுனாவ, இலக்கம் 598 இல் வசிக்கும் லயனீ பிரார்த்தனா உடவத்த (தே.அ.அ.இ. 198156204629) என்பவருக்கு அதிகாரமளித்திருப்பினும், நான் மீண்டும் நாடு திரும்பியுள்ளபடியால் மேற்படி 860 இலக்கமுடைய விஷேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/MH/09
காணி அமைச்சின் இல.: 4-3/10/2013/LRB/458

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக்காணித் துண்டுகள் தொடர்பாக, காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள நட்டஈட்டு உரித்து விசாரணைகள், 2022 ஆம் வருடம் 09 மாதம் 14ஆம் திகதி நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2022.07.21 ஆம் திகதிய 2289/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க.

**அட்டவணை**

1. மாகாணம் : மேல் மாகாணம்.
2. மாவட்டம் : கொழும்பு.
3. பிரதேச செயலாளர் பிரிவு : மகரகம
4. அமைவிடம் : தெல்கந்த கெக்குலாவல பிளேசிற்கும், கங்கொடவில வளவ்வத்த வீதிக்கும் இடையிலுள்ள காணித் துண்டுகள்.
5. கிராம உத்தியோகத்தர் பிரிவு: இல. 526/D- ஜம்புகஸ்முல்ல.
6. கிராமம் : கங்கொடவில.
7. வரைபட இல. : ஆரம்ப வரைபட இல. කො:9624.
8. காணியின் பெயர்கள் : புவக்கஹ கும்புர, கஹட்டகஹ கும்புர மற்றும் பிற பெயர்கள்.
9. துண்டு இல. : துண்டு இல. 1 தொடக்கம் துண்டு இல. 5 வரை ஐந்து (05) காணித் துண்டுகள்
10. முழு விஸ்தீரணம் : 0.2458 ஹெக்டயார்.

**எச். திலக்கவர்தன,**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர்**
**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு, சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.**
**மகரகம பிரதேச செயலாளர் பிரிவு**

**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு, சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம், இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம், இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கடை இராஜகிரிய.**
**2022.08.2**

# விலைமனு அழைத்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் – பணிப்பாளர் பணிமனை – கேகாலை

தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் வளிச்சீராக்கி இயந்திரங்கள், குளிரூட்டிகள், இலத்திரனியல் உதிரிப்பாகங்கள், மின்சார உதிரிப்பாகங்கள், கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல்.

01. கேகாலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மற்றும் அதன் கீழ் செயற்படும் ஏனைய சுகாதார நிறுவனங்களின் உபயோகத்திற்காக மேற்படி பண்டங்களை வழங்குவதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து 2022.10.04 அன்று மு.ப. 10.30 வரை முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இதற்காக ஆர்வமுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தும் விலைமனுதாரர்கள் கேகாலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவில் 2022.09.08 முதல் 2022.10.03 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலப்பகுதியில் விலைமனுப்படிவங்களைக் கொள்வனவு செய்து கொள்ளவும் மற்றும் பரிசீலனை செய்து கொள்ளவும் முடியும்.

03. பண்டங்கள் தொடர்பான விபரக்குறிப்புக்கள் மற்றும் விலைமனு ஆவணங்களை, www.rdhskegalle.lk என்ற இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**டாக்டர் அசேல பெரேரா**
**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை**
**கேகாலை.**
**தொ.பே. 035-2222549/ 035-2222578/ 035-2222571**
**தொலைநகல் - 035-2221253**

NLDB

# தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை

## பெறுகை அறிவித்தல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு கோழி இன விருத்தி சந்தைக்காக தயாரிக்கப்பட்ட கோழி உணவுகளை வழங்குவதற்காக 1986 இல 15 விலங்குணவு சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள விலங்குணவு உற்பத்தியாளர்களிடமிருந்து கீழ்க்காணும் கால எல்லையுடன் சம்பந்தப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. **கோழியுணவு**
கோழி இனவிருத்தி பண்ணை - 2022 ஒக்டோபர் 01 முதல் 2022 டிசம்பர் 31ம் திகதி வரை

| பண்ணை | விலங்குணவு வகை | தேவைப்படும் அளவு (மெ.தொ) | கேள்விப் பிணை முறி (ரூ) |
|---|---|---|---|
| கரதகொல்ல | Broiler Breeder Starter | 6 | 17,833,500.00 |
| | Broiler Breeder Grower | 11 | |
| | Broiler Breeder Layer I | 29.1 | |
| | Broiler Breeder Layer II | 96.4 | |
| | Broiler Breeder Male | 14.1 | |
| மிரிஸ்வத்த | Broiler Breeder Starter | 5.2 | 20,315,000.00 |
| | Broiler Breeder Grower | 12.5 | |
| | Broiler Breeder Layer I | 159.5 | |
| மாரவில | Layer Breeder Starter | 6 | 10,190,000.00 |
| | Layer Breeder Layer | 80 | |
| மஹாவலி விலங்கு வர்த்தக கம்பனி | Broiler Breeder Starter | 6 | 36,847,000.00 |
| | Broiler Breeder Grower | 35 | |
| | Broiler Starter | 45 | |
| | Broiler Finisher | 60 | |
| | Broiler Breeder Layer (I) | 140 | |
| மாவத்த | Broiler Breeder Starter | 5 | 7,450,000.00 |
| | Broiler Breeder Grower | 10 | |
| | Broiler Breeder Layer I | 50 | |

விலங்குணவு தேவையான அளவு, மாதிரிகள் (Specifications) மற்றும் கேள்வி நிபந்தனைகள் உள்ளடக்கிய ஆவணங்களை அலுவலக (வேலை) நேரங்களில் கீழ்க்காணும் முகவரியில் உள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் வழங்கல்கள் முகாமையாளரிடம் வேண்டுதல் கடிதத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். ஒரு கேள்விக்காக ரூ. 5,000.00 வீதமான மீளளிக்கப்படாத வைப்பு அறவிடப்படும்.

2022 செப்டெம்பர் 20 பி.ப. 3.30 வரை ஆவணங்கள் விநியோகிக்கப்படுவதுடன், 2022 செப்டெம்பர் 21ம் திகதி மு.ப. 10.30 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடையும் மேற்படி நேரம் முடிவடைந்தவுடன் கொழும்பு - 05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, இல. 40 இல் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையில் கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**
**இல. 40, நாவல வீதி, கொழும்பு - 05**
**தெ.பே.இல. 0112501701/2, 0115746308**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/PT/6027(MAR) | Spares for Overhauling the Scania DSI 1643 Main Engines of Pilot Launch 15 | 127,500.00 | 3,500.00 | 06-10-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6317(MAR) | Supply, Installation of 01 No. Electro Hydraulic Towing Winch Cum Anchor Windlass on Board 45 Ton Bollard Pulling Capacity M/T Vijayabahu | 400,000.00 | 3,500.00 | 06-10-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6349(EL) | Aquamaster Turning Controllers for Aquamaster US 2001/3150 Propulsion System of M/T Vijayabahu | 12,000.00 | 1,000.00 | 06-10-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6370(MP) | 16 Nos. Guide Rollers Fitted to Mitsui RTGS at JCT | 33,500.00 | 1,000.00 | 06-10-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6373(MP) | 20 Nos. Heavy Duty Single Strand ,160,102 Links Roller chains for SHI 41T RTGS | 55,000.00 | 1,000.00 | 11-10-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/04/009 | Rice Steamers – 100KG – 08 Nos. | 44,000.00 | 1,000.00 | 29-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/03/054 | 30 Nos. of 250 X 15 Tyres for 3.5 T Fork Lift Trucks | 27,000.00 | 1,000.00 | 29-09-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 செப்டெம்பர் 09ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## 2023ஆம் வருடத்தின் பொருட்டு உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கைத் துறைமுக அதிகார சபையில் பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனம், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் கூட்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01 | பெட்டறி, ஈயம், அமிலம் மற்றும் அவ்வாறான பொருட்கள் |
| 02. | இயந்திராதிகளுக்குத் தேவையான சகல பெயாரிங் வகைகள் |
| 03. | கட்டிடப் பொருட்கள் (செங்கல், கல், மணல், இரும்பு, PVC குழாய்கள் மற்றும் உருப்படிகள், கூரைத் தகடுகள் மற்றும் சீலிங் சீட்டுகள்) |
| 04. | இரசாயனப் பொருட்கள், கைத்தொழில், விவசாய இரசாயனங்கள், களைக் கொல்லிகள், அனைத்து வகையான சவர்க்காரங்கள், சுத்திகரிப்புப் பொருட்கள், கிருமிநாசினி வகைகள் |
| 05 | சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| 06 | கணனி, தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணனி அச்சுப் பொறிகள், மென்பொருள்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், டோனர் வகைகள் |
| 07 | வீட்டு மின் உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள், VHF மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரண உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பாகங்கள், கட்புல செவிப்புல உபகரணங்கள், வளிச் சீராக்கி இயந்திரங்கள், உறைநிலை குளிர்சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 08 | மின்சார கேபள்கள் மற்றும் தொலைத்தொடர்பு கேபள்கள் |
| 09 | மின்சார கட்டுப்பாட்டு முறைமை மற்றும் துணைப்பொருட்கள் மற்றும் மின்சார பொருத்தும் பொருட்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 10 | தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 11 | பொறியியலாளர் கருவிகள் மற்றும் உபகரணங்கள், நீர்க்குழாய் திருகு மூடிகள், பம்பிகள், எரிவாயு மற்றும் சமையலறை உபகரணங்கள், உருக்கியொட்டும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 12 | பாதணிகள் - கன்வஸ் மற்றும் தோற் சப்பாத்துகள், பூட்ஸ், பாதுகாப்பு காலணிகள் போன்றன |
| 13 | உலோகப் பொருட்கள் ஆணிகள் மற்றும் சுரைகள், பித்தளை உபகரணங்கள், உலோகக் குழாய்கள் மற்றும் குழாய் பொருத்தும் பகுதிகள், உலோகத் தகடு, உலோக பொதுவான பல்வேறு வடிவங்கள் மற்றும் கவசப் பொருட்கள், வலை வகைகள், தும்புத்தடி, ஈர்க்கிள், தும்புக் கயிறு மற்றும் ஏனைய தும்பு உற்பத்திகள், கம்பித் தூரிகை மற்றும் அனைத்து வகையான நிறப்பூச்சுகள் பூசும் தூரிகை வகைகள், கண்ணாடி, மெல்லிய பலகைகள் MDF மற்றும் போர்மிகா வகைகள் |
| 14 | தகரங்களைச் சுத்தம் செய்யும் கிறிட் பிளாஸ்டிங் செயற்பாடுகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் வார்ப்பு மண் |
| 15 | ஹோஸ் குழாய்கள் (ஹைட்ரோலிக், அதியமுத்த வாயு, தீயணைப்பு போன்றவைகளுக்கானது) |
| 16 | உராய்வுநீக்கி எண்ணெய்கள் |
| 17 | மெனிலா, புரோலிபொப்லின் மற்றும் நைலோன் கயிறுகள் |
| 18 | கையடக்கத் தொலைபேசிகள் |
| 19 | அலுவலக காகிதாதிகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதாதிகள் |
| 20 | நிறப்பூச்சுகள் (இனாமல் மற்றும் இமல்ஷன்) பொலிஷ் மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகள், விசிறியடிக்கும் நிறப்பூச்சு வகைகள் மற்றும் அதனைச் சார்ந்த நிறப்பூச்சு வகைகள் (உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் மட்டும்) |
| 21 | போர்சலின் பொருட்கள், துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் |
| 22 | வீதிகளுக்கான தார் வகைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட தார் கலவை, சீமெந்து மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகள் |
| 23 | இறப்பர் மற்றும் வேல்கனைக்சிங் உற்பத்திகள் |
| 24 | பாதுகாப்புப் பொருட்கள் மற்றும் தீயணைப்பு உபகரணங்கள், சுழியோடும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 25 | வாகன உதிரிப்பாகங்கள், ரேடியேட்டர் மற்றும் ரேடியேட்டர் கோர்கள் |
| 26 | கிரேன், போக் லிப்ட், டொப் லிப்ட் போன்றவற்றுக்கான உதிரிப்பாகங்கள், கடல்சார் சாதனங்களுக்கான உதிரிப்பாகங்கள், பிரைம் மூவர்கள் மற்றும் யாட் டிராக்டர்களுக்கான உதிரிப்பாகங்கள் |
| 27 | உருக்குத் தளபாடங்கள், மரத் தளபாடங்கள் மற்றும் ஏனைய அலுவலகத் தளபாடங்கள் |
| 28 | அரியப்பட்ட பலகைகள் |
| 29 | டயர்கள் மற்றும் டியூப்கள் |
| 30 | வயர் ரோப் வகைகள் |
| 31 | மேற்கத்திய மற்றும் உள்நாட்டு மருத்துவ உபகரணங்கள் |
| 32 | புகைப்படங்களை அச்சிடல் மற்றும் வடிவமைத்தல் |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநராக பதிவு செய்து கொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 01 தொடக்கம் 32 வரையான பொருட்களுக்காக பதிவு செய்து கொள்வதற்கு அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 03.30 மணி வரை 2022-11-30ஆம் திகதி வரையில் தேவையான விண்ணப்பப் படிவங்களை 1000.00 ரூபா மற்றும் வெட் வரியைச் செலுத்தியதன் பின் இல. 45, லேடன் பஸ்டியன் வீதி, கொழும்பு-01இல் அமைந்துள்ள வழங்கல் பிரிவின் பிரதான வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. வழங்கலின் பொருட்டு பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடம் இருந்து விலைகளைக் கோரவும் கொள்வனவு செய்வதற்கான உரிமை துறைமுக அதிகார சபையைச் சார்ந்தது.

04. முறையாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள், துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளுக்கு ஒவ்வாத தன்மையிலுள்ள பொருட்கள் மற்றும சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

05. அனைத்து விண்ணப்பங்களும் ''2023ஆம் வருடத்திற்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்), வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு 2022-11-30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள பிரதான வழங்கல் முகாமையாளர் அலுவலகத்தில் இந்த விண்ணப்பங்களை நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2328342, 2320250, 2482761 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01**

# இந்திய அணியை வீழ்த்திய இலங்கை அணிக்கு இறுதிப் போட்டிக்கு வாய்ப்பு

ஆசிய கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிரான சுப்பர் போர் போட்டியில் கடைசி ஓவர் வரை போராடி 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை அதிகரித்துக் கொண்டுள்ளது.

மறுபுறம் நடப்புச் சம்பியனான இந்திய அணி இந்தப் போட்டியில் தோற்றதன் மூலம் பெரும்பாலும் இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்துள்ளது. அந்த அணி இந்தத் தொடரில் தொடர்ந்து இறுதிப் போட்டிக்கு முன்னேற சிறிய வாய்ப்பு ஒன்றே உள்ளது.

டுபாயில் கடந்த செவ்வாய்க்கிழமை (6) நடைபெற்ற இந்தப் போட்டியில் 174 ஓட்டங்களை துரத்திய இலங்கை அணிக்கு பத்தும் நிஸ்ஸங்கள் (52) மற்றும் குசல் மெண்டிஸ் (57) அதரடி ஆரம்பத்தை பெற்றுக் கொடுத்தனர்.

எனினும் இந்தியா அடுத்தடுத்து விக்கெட்டுகளை வீழ்த்தியதால் இலங்கை அணி மத்திய ஓவர்களில் தடுமாற்றம் கண்டது. எனினும் பானுக்க ராஜபக்ஷ மற்றும் அணித்தலைவர் தசுன் ஷானக்க இணைந்து இலங்கை அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தனர். இதன்போது கடைசி



ஓவருக்கு 7 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் இருவரும் சற்றுத் தடுமாற்றத்துடனேயே அதனை எட்டினர்.

ராஜபக்ஷ ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் ஷானக்க ஆட்டமிக்காது 33 ஓட்டங்களையும் பெற்று பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 64 ஓட்டங்களை குவித்து வெற்றியை உறுதி செய்ததன் மூலம் இந்தத் தொடரில் வெற்றி வாய்ப்பு அதிகம் இருந்த இந்தியாவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்திய அணி முன்னதாக சுப்பர் போர் சுற்றின் முதல் போட்டியில் பாகிஸ்தானிடமும் தோல்வியை சந்தித்திருந்தது.

அவதானத்துடன் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நிஸ்ஸங்க, அர்ஷ்தீப் சிங் வீசிய ஐந்தாவது ஓவரில் இரு பௌண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 18 ஓட்டங்களை பெற்றார். பின்னர் அவருடன் இணைந்த மெண்டிஸ் பெண்டரிக்கு பந்துகளை அனுப்ப ஆரம்பித்தார்.

நிஸ்ஸங்க 33 பந்துகளில் அரைச்சதத்தை எட்டியபோதும் யுஸ்வேந்திரா சஹாலின் ஓவரில் ஆட்டமிழந்தார். அதே ஓவரில் சரித் அசலங்கவும் டக் அவுட் ஆக இலங்கை தடுமாற்றம் கண்டது.

மெண்டிஸ் அரைச்சதத்தை பூர்த்தி செய்தபோதும் தனுஷ்க குணதிலக்க, ரவிச்சந்தர் அஷ்வினின் பந்துக்கு ஆட்டமிழந்த நிலையில் அடுத்த ஓவரிலேயே மெண்டிஸ் ஆட்டமிழக்க இலங்கை அணி 110 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுகளை இழந்தது. இலங்கை 13 ஓட்ட இடைவெளியிலேயே 4 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் ராஜபக்ஷ, சானக்க தேவையான ஓட்ட வேகத்தை தக்கவைத்து இலங்கையின் வெற்றியை உறுதி செய்தனர்.

இடது கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க 24 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்திய நிலையில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இந்திய அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களை பெற்றது. ரோஹித் ஷர்மா 41 பந்துகளில் 72 ஓட்டங்களை விளாசினார்.

விராட் கொஹ்லியின் டக் அவுட் உடன் இந்திய அணி ஆரம்பத்திலேயே மூன்று விக்கெட்டுகளை பறிகொடுத்தபோதும் ரோஹித் ஷர்மா, சூர்யகுமார் யாதவ் (34) உடன் இணைந்து 97 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார்.

எனினும் இலங்கை பந்துவீச்சாளர்களால் கடைசி ஓவர்களில் இந்தியாவின் துடுப்பாட்ட வேகத்தை மட்டுப்படுத்த முடிந்தது. இலங்கை அணி தனது கடைசி சுப்பர் போர் போட்டியில் நாளை பாகிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog

OBSERVER SLT-MOBITEL 44th SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..................
வாக்களித்தவர் பெயர் : ..................
முகவரி : ..................
மொபைல் இல. : ..................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 10-09-2022 இல. 24



வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.
இன்றே SLT-MOBITEL உடன் இணையுங்கள்!
SLTMOBITEL

## மலேசிய அணிக்கு எதிராக இலங்கை பரபரப்பு வெற்றி



சிங்கப்பூரில் நடைபெற்று வரும் ஆசிய வலைப்பந்து சம்பியன்சிப் போட்டியின் மலேசியாவுக்கு எதிரான இரண்டாம் சுற்று ஆட்டத்தில் இலங்கை அணி 55–53 என்ற புள்ளிகள் கணக்கில் பரபரப்பு வெற்றியை பெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை (6) நடைபெற்ற இந்தப் போட்டியின் முதல் சுற்று மற்றும் நான்காம் சுற்றில் பின்னடைவை சந்தித்த நிலையில் இலங்கை அணி போட்டியில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த வெற்றியுடன் இலங்கை அணியின் அரையிறுதிக்கு முன்னேறும் நம்பிக்கை அதிகரித்துள்ளது.

## கல்முனை சாஹிராவை வென்றது பொலிஸ் அணி

மாளிகைக்காடு குறூப் நிருபர்



156 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற சினேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை சாஹிரா தேசியக் கல்லூரி அணியை வீழ்த்தி பொலிஸ் அணி வெற்றியீட்டி கிண்ணத்தை சுவீகரித்தது. இந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி கல்முனை சாஹிரா தேசியக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. 10 ஓவர்கள் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி ஆசிரியர் அணியினர் 5 விக்கெட்டுக்களை இழந்து 89 ஓட்டங்களை பெற்றது. பொலிஸ் அணியினர் 8 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 91 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.



## பத்தும் நிஸ்ஸங்க முன்னேற்றம்

ஆசிய கிண்ணத் தொடரில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிஸ்ஸங்க துடுப்பாட்ட வீரர்களுக்கான ஐ.சி.சி தரவரிசையில் ஓர் இடம் முன்னேற்றம் கண்டு 8 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

நிசங்க ஆசியக் கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் அதிரடியாக 52 ஓட்டங்களை பெற்று இலங்கை அணியின் வெற்றிக்கு உதவினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிய கிண்ணத் தொடரில் சிறப்பாக துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் விக்கெட் காப்பாளரும் ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான மொஹமட் ரிஸ்வான், சக வீரர் பாபர் அசாமை பின்தள்ளி முதலிடத்தை பிடித்துள்ளார். ரிஸ்வான் ஆசிய கிண்ணத்தில் முதல் மூன்று போட்டிகளிலும் 192 ஓட்டங்களை பெற்று அதிக ஓட்டங்கள் பெற்ற வீரர்கள் வரிசையில் முதல் இடத்தில் உள்ளார்.

பந்துவீச்சாளர் வரிசையில் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன ஐந்து இடங்கள் முன்னேற்றம் கண்டு 8ஆவது இடத்தை பிடித்துள்ளார். எனினும் ஆசிய கிண்ணத்தில் சோபிக்கத் தவறிவரும் வனிந்து ஹசரங்க 3 இடங்கள் பின்தங்கி 9ஆவது இடத்துக்கு சரிந்துள்ளார்.

டி20 பந்துவீச்சாளர் தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் ஜோஷ் ஹேசல்வுட் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

## சர்வதேச செய்திகள்

## பாகிஸ்தானில் மனிதாபிமான நெருக்கடி

பாகிஸ்தானில் மனிதாபிமான நெருக்கடி மோசமாகிவருவதாக ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ளது. இன்னும் கூடுதல் நன்கொடையும் உடனடி நிவாரண உதவியும் தேவை என்று அது தெரிவித்தது.

வெள்ளத்தால் அவதியுறும் பாகிஸ்தானில் இன்னும் அதிகச் சேதம் ஏற்படக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

நாட்டின் பெரிய ஏரிகளில் ஒன்றான மான்சர், கரையை மீறிப் பெருக்கெடுக்கும் அபாயத்தை எதிர்நோக்குகிறது. சுமார் 100,000 பேர் வீடுகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.



அங்கு நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்துவருகிறது. மான்சர் ஏரி, கரைபுரண்டு ஓடினால் இன்னும் 100,000 பேரின் வீடுகள் வெள்ளத்தில் அழிந்துவிடும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை பாகிஸ்தான் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சிந்து மாகாணத்தில் வெள்ளம் வடியாததால் மக்கள் தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். நுளம்புகள் அதிகளவில் பெருக்கெடுத்து இருப்பதால் மலேரியா நோய் பரவ ஆரம்பித்திருப்பதாக அப்பகுதி மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## வியட்நாம் இசைக் கூடத்தில் தீ: 14 பேர் பலி

வியட்நாமின் தென் பகுதியில் ஓர் இசைக் கூடத்தில் தீப்பற்றியதில் 14 பேர் உயிரிழந்திருப்பதோடு, மேலும் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று கட்டடத்தின் 2 மற்றும் 3ஆவது மாடிகளில் தீப்பற்றியது. அவற்றில் வாடிக்கையாளர்களும் ஊழியர்களும் சிக்கிக் கொண்டதாக அரசாங்க ஊடகம் தெரிவித்தது. தீயிலிருந்து தப்பிப்பதற்குப் பலரும் மொட்டை மாடியில் கூடியதாகவும் சிலர் கட்டடத்திலிருந்து குதித்ததாகவும் கூறப்படுகிறது. அந்த இசைக் கூடம் கூட்டம் நிறைந்த குடியிருப்புப் பேட்டையில் அமைந்துள்ளது.

தீயைக் கட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் தீயணைப்பாளர்கள் பலர் ஈடுபட்டனர். மீட்புக் குழுக்கள் கட்டடத்தில் சிக்கியிருப்போரைத் தேடிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. தீ மூண்டதற்கான காரணம் இன்னும் தெரியவில்லை. அது குறித்த விசாரணை நடைபெற்று வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 8ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.